
## நள்ளிரவு 12 மணிக்கு தினசரி சைக்கிள் ஓட்டப்போட்டி
## 'கமோன்' சொல்ல யாருமில்லை, தண்ணீர் ஊற்றுவாருமில்லை!

மனதை உருக்கும் ராத்திரி ரவுண்டப் ஐந்தாம் பக்கத்தில்

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 இதழ் 82 சனி 28-04-1990 (சித்திரை 15) ஷவ்வால் 02



# ஈ. பி. ஆர். எல். எப்வுடன் பேசமுன்
# விடுதலைப் புலிகளுடன் அரசு பேசும்

## அன்ரன் பாலசிங்கம், யோகரட்ணம் யோகி இன்று கொழும்பு பயணமாவார்கள்

ஈ பி ஆர்.எல் எப் பினருடன் பேச்சுகள் நடாத்துவதற்கு முன்பாக விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சு நடாத்தவுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் யோகியும் இன்று கொழும்பு செல்கின்றனர் என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடனும் மற்றுமோர் சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நாடத்துவதற்காவே இவர்கள் கொழும்பு பயணமாவதாக தெரியவருகிறது.

எதிர் வரும் மே 15 ஆம் திகதி ஈ.பி,ஆர்.எல் எப் இனருடன் அரசுபேச்சுகள் நடாத்தவுள்ளது. முன்னதாக விடுதலைப்புலிகளுடன் சில முக்கிய விடயங்கள் தொடர்பாக பேச்சு நடாத்த இலங்கை அரசு விரும்புவதாக தெரியவருகிறது.

## வவுனியா காமினி வித்தியாலய இராணுவத்தை அகற்ற முயற்சி

வவுனியா மன்னார் வீதி காமினி சிங்கள மகாவித்தியாலயத்தில் நிலை கொண்டுள்ள இலங்கை இராணுவத்தினரை அங்கிருந்து அகற்றுவதற்கு இராணுவ உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது

வவுனியாவில் பூரண அமைதி நிலவுகிறது குற்றச் செயல்கள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் உயர்மட்ட ஆலோசனையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தியப்படைகள் வவுனியா நகரில் இருந்து வாபஸ் பெறப்பட்ட பின்னர் மேற்படி மகாவித்தியத்தில் இலங்கை இராணுவத்தினர் நிலைகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (11

## வன்னியில் நாளை தேனிசை செல்லப்பாவின் பாடல் நிகழ்ச்சி

தமிழக எழுச்சிப் பாடகர் தேனிசை செல்லப்பாவினை கௌரவிக்க வவுனியா வர்த்தக சங்கம் ஏற்பாடுகளை செய்துள்ளது. எதிர்வரும் ஞாயிறு 29 ம் திகதி மாலை இவரது நிகழ்ச்சி வவுனியா,நகரசபை முற்றவெளியில் நடைபெறவிருக்கின்றது.

இவரது இன்னுமொயிரு நிகழ்ச்சி மே மாதம் 2 ம் திகதி வன்னியில் நெடுங்கேணி பொது விளையாட்டு மைதாத்

—8 ஆம் பக்கம் பார்க்க

## சிறையில் உள்ள ஜே வி பியினருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படும்

தற்போது கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள சுமார் ஐயாயிரம் ஜே. வி, பி தீவிரவாதிகளை ஆயுள் முழுவதும் சிறையில் வைத்திருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது, இதற்காக அரசியல் திருத்தச்சட்டத்திலும் சில மாற்றங்களை அரசு கொண்டு வரத்தீர்மானித்துள்ளது என்று இந்திய வானொலி அறிவித்தது.

இத்தகவலை பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## காலாவதியான உணவுப்பொருள் விற்பனைசெய்து மோசடி

வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ளபல வர்த்தக நிலையங்களில் பாவனை எல்லை முடிவடைந்த பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுவருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக மருந்து வகைகள் போஷாக்கு உணவுவகைகள், பால்மா போன்ற பொருட்களே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுவருகின்றன இப்பொருட்களில் பதியபட்டுள்ள முடிவடையும் திகதியின் மேல்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## ஒப்பந்தக்காரர், தொழிலாளர் பற்றுக்குறை வடபகுதி அபிவிருத்தி வேலைகள் ஸ்தம்பிதம்

பாரிய வேலைகளை மேற்கொள்ளும் கட்டட, ஒப்பந்தக்காரர்கள் இல்லாத காரணத்தினால் வடபகுதியில் பல அபிவிருத்தித்திட்டங்கள் ஸ்தம்பித நிலையடைந்துள்ளன.

யாழ் பல்கலைக்கழகத்திற்கு போதியளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் பல கட்டட வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளன அத்துடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட கட்டடவேலைகளும்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## அவசர தேவைகளுக்கு பிறப்புசான்றிதழ் முன்னுரிமை

பிறப்புச்சாட்சிப் பத்திரத்தை அவசிய தேவை காரணமாக முன்னுரிமை அடிப்படையில் பெறவிரும்புவோர் யாழ். செயலக பதிவாளருடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்,

முன்னுரிமை அடிப்படையில் பெறவிரும்புவோர் அதற்கான தகுந்த காரணத்தைக் காட்ட வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு தேவையானல்

— 8 ஆம் பக்கம் பார்க்க

உன்னை

காதலரே
காதலில் உங்கள்
குணம் எப்படி?
பிறந்த தினம்
அம்பலமாக்குகிறது

## சரணடைந்த - கைதான 89 பேர் இன்று புங்குடுதீவில் விடுதலை

விடுதலைப் புலிகளிடம் கைதான, சரணடைந்த 89 இளைஞர்கள் இன்று மாலை புங்குடுதீவில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

மாலை நாலரை மணியளவில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் மேற்படி 89 இளைஞர்களும் விடுதலைப் புலிகளினால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர் இந்நிகழ்ச்சிக்கு விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் காஸ்ரோ தலைமைதாங்குவார்

## 35 ஆயிரத்து 334 குடும்பங்களுக்கு இன்னமும் யாழ்மாவட்டத்தில் நிவாரணம் வழங்கப்படவில்லை

யாழ் மாவட்டத்தில் 35 ஆயிரத்து 335 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்த்தல் நிவாரணம் வழங்கப்படவில்லை

இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவதற்கான பேச்சு வார்த்தைகள் கொழும்பில் நடைபெற்று வருகின்றன. இந்த இரண்டாயிரம் ரூபா நிவாரனத்திற்காக யாழ் மாவட்டத்தில் 185334 குடும்பங்கள் பதிந்திருந்தன.

இவற்றில் 150000 குடும்பங்களுக்கே இந்தநிவாரணம் வழங்கும்படி புனர்வாழ்வு அமைச்சு நிதி ஒதுக்கியிருந்தது,

மிகுதி 35 334 குடும்பங்க

... 8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் மாவட்ட ஆசிரியர்களின் சேவைகள் உடனடிக்கவனிப்பு

யாழ் மாவட்ட பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களின் சேவைகள் இனி மேல் உடனுக்குடன் கவனிக்கப்படுமென யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர்திரு. இராசுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்,

சகல ஆசிரியர்களும் பதிவேடுகளை தவறாமல் பதிய வேண்டுமென்றும் இப்பதிவேடுகள் உடனுக்குடன் பரிசீலிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார் (03)

## சிறு விளம்பரம்


### குத்தகைக்கு

ஆங்கில மருந்துக்கடை குத்தகைக்கு உண்டு தொடர்பு :- செவ்வந்தி சாவகச்சேரி. 04256

### காணி விற்பனைக்கு

கொக்குவில் Press Lane இல் 3¼ பரப்பு காணி தென்னை, பலா, மா பிரயோசனங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இ. கைலைநாதன், 120, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 04058

### தவறி விட்டது

HONDA 217 மோட்டார் சைய்க்கிள் சாவியுடன் திறப்புக்கோர்வை ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில் தொலைந்து விட்டது. கொடுப்பவர்க்கு சன்மானம் வழங்கப்படும் தொடர்பு:- வதனா டிஸ் பென்ஸரி சாவகச்சேரி 04257

### கல்வி

G.C.E (O L) கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 23 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும், பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் புலமைப் பரிசிலுக்குரிய பாடங்களும் இலக்கணத்துடன் பேச்சு ஆங்கிலமும் கற்பிக்கப்படும் சந்திக்கும் நேரம் காலை 6-8 ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. 04260

### விற்பனைக்கு

அல்சேஷன் இன நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு தேவையானோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி 63 பருத்தடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 04262

### CLASSES

Learn or to improve your Chess play Call at Jaffna Chess Acadamy, 161 Brown Road. Jaffna. 04239


## வருடாந்தகூட்டம்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று முற்பகல் சங்கத் தலைவர் திரு வை செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் 34 கிளைகளிலிருந்தும் பொதுச் சபை உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளரும் இதில் கலந்து கொள்வார். சங்க வரவு செலவுத் திட்டமும் இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

## நடவடிக்கை

மாமரங்களுக்கு மருந்து விசிறும் நடவடிக்கைகள் தற்போதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உடுவில், நல்லூர், சாவகச்சேரி சமநலசேவை நிலையங்களில் இந்த மருந்து விசிறும் இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதன் சேவையைப் பெற விரும்புவோர் தமது பகுதி சமநலசேவையாளருடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள் (03)

## வேலி இல்லாத வைத்தியசாலை

வேலணை அரசினர் ஆஸ்பத்திரியை சுற்றிவர அடைக்கப்பட்ட வேலிகள் யாவும் சிதைந்த நிலையில் வெளியாக காட்சி தருகின்றது.

இந்த திறந்த வெளியினால் கட்டாக்காலி ஆடு மாடுகள் ஆஸ்பத்திரி வார்டுக்களில் புகுந்து அங்கு அசுத்தப்படுத்தியும் வருகின்றன. இந்த கட்டாக்காலி மிருகங்களின் தொல்லையினால் நோயாளர்களும் அசௌகரியமடைகின்றனர். (24)

## உணவு முத்திரை விநியோகம்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய இந்தாவது சுற்று உணவு முத்திரைகள் அவ்வப்பிரிவு கிராமசேவை அலுவலர்களினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் தவறான தகவல்களை கொடுத்து உணவு முத்திரைகளை பெற்று வந்த பல வசதிபடைத்த குடும்பங்களுக்கு இம்முறை உணவு முத்திரை வழங்கப்படவில்லை என்று அறியப்படுகின்றது.

இது விடயத்தில் கிராம சேவை அலுவலர்கள் மிகுந்த விழிப்புடன் கருமமாற்றுவதாகவும் தெரிய வருகின்றது 13)


# அறிவித்தல்

## மின் தடை

இலங்கை மின்சாரசபையால் சில திருத்தவேலைகள் செய்யவிருப்பதால் 29 04 90 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 முதல் மாலை 5.00 மணிவரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பின் குறிப்பிடும் உப மின் நிலையங்களை தவிர்ந்த ஏனைய உப மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பதை முன் கூட்டியே இத்தால் அறியத்தருகின்றேன்.

### மின்சாரம் கிடைக்கும் உப மின் நிலையங்கள்

1. பட்டினப் பிராந்தியம்
2. ஆர். ஜீ.
3. கன்னாதிட்டி
4. ஐந்து சந்தி
5. மனோகரா

வி. பி பாலசிங்கம்,
ஆணையாளர்,
யாழ் மாநகராட்சி மன்றம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
26. 04. 90.

04255


# ஐக்கியம் மலர பரஸ்பரம் புரிந்துணர்வு அவசியம்

## அடிகளார் வலியுறுத்து

''சகல இனங்களுக்கிடையேயும் ஐக்கியமும், ஒருமைப்பாடும் வளரவேண்டும் என்று கூறுகின்ற நாம் சகல மதங்களுக்கிடையேயும், ஐக்கியமும், புரிந்துணர்வும் ஏற்படவேண்டும் என்பதை மனதிற் கொண்டு அதற்காக உழைக்க முன்வரவேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் பிற மதங்களைப்பற்றியும், அவர்களுடைய கொள்கைகள், விசுவாசங்கள் என்பவை குறித்தும் அறிந்திருத்தல் இன்று அவசியமாகிறது.

பல இன மக்களிடையேயும், பலதரப்பட்ட சமூக மக்களிடையேயும் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் கட்டி வளர்க்க மதங்கள் உதவுகின்றன. சரித்திர காலத்திலே பேதங்களினால் மக்கள் பிரிந்து வாழ்ந்தார்கள் தம்மிடையே பயங்கரமான யுத்தங்களைப் பல நூற்றாண்டு காலமாக நடத்தி வந்தார்கள்

இதனால் பலவிதமான அழிவுகளை ஏற்றுக்கொண்டார்கள் அன்று மதத்தின் பேரால் மக்கள் மாண்டொழிந்தனர். ஆனால் இன்று அந்த நிலைமையிற் சிறிது வேறுபாடுகள் காணப்படுகின்றன. இன்று மத போராட்டங்கள் முடிவடைய இன, நிற, மொழிப் போராட்டங்களோ மக்களைக் கதிகலங்கச் செய்கின்றன''

இவ்வாறு யாழ்ப்பாணம் கிறிஸ்துநாதர் ஆலய ஜெபமண்டபத்தில் வடக்குக்-கிழக்கு திருவட்டகையின் இறைமக்கள் பயிற்சி நிலையத்தின் ஆதரவில் ''கிறிஸ்தவர்களும் ஏனைய மறையடியார்களும்'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமைவகித்த அருட் கலாநிதி ஐசக் கென்றி விக்டர் அடிகளார் பேசுகையிற் குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் 'இந்து மறையடியாரின் நம்பிக்கையைப் புரிந்துணர்தல்' என்ற தலைப்பிற் கலாநிதி பி கோபாலகிருஷ்ணனும் 'கிறிஸ்தவர்களும் ஏனைய மறையடியார்களும்' என்ற தலைப்பில் அருட் கலாநிதி எஸ். யே. இம்மனுவேல் சுவாமியும் 'முஸ்லீம்களுடைய நம்பிக்கையைப் புரிந்துணர்தல்' என்ற தலைப்பில் மௌலவி பி. ஏ. எஸ் சுல்வாயன் சலீமும் கருத்துரை வழங்கினார்கள்.

திருமதி ஜி என். சற்குணசிங்கம் மத்தியான வழிபாட்டை நடாத்தினார்கள். இறுதியில் திரு ஜெயராசா அவர்கள் நன்றி கூறினார்.

# வடமராட்சி கிழக்கிற்கு உதவி ஆணையாளர் விஜயம்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் பல்வேறு கிராமங்களை நேரில் பார்வையிட்டதன் மூலம் அவர்களின் நீண்டகால குறைகளை அறிய முடிந்தது. இப்பிரதேசத்தில் வீதி, போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் இக்கிராமங்களை முன்னேற்றமுடியும். அதற்கு என்னாலான முழு உதவியும் உங்களுக்குக் கிடைக்கும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலால் கட்டைக்காடு றோ.க பாடசாலையில் திரு கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின், கிழக்கெல்லை கிராமங்கள் மக்கள் அற்ற மணற்றாங்கானகாட்டுப் பிரதேசமும் தரிசுநிலமும் எனக் கூறப்பட்டது இன்று நேரில் பார்க்கும் போது நிறைந்த கடல் வளமும் பயிர்வளமும் உள்ள பகுதியாகவுள்ளது.

போக்குவரத்து வசதிகள் இல்லாதகாரணத்தினால் பிடிக்கும் மீன், கருவாடு உற்பத்தி செய்யும் விளைபொருட்களை சந்தைப்படுத்த முடியாத நிலையிலுள்ளனர். கூடிய விரைவில் இக்குறை நீங்க நடவடிக்கை எடுப்பேன் எமது திணைக்களத்தால் ஒவ்வொரு வேலைக்கும் ஒதுக்கப்படும் பணம் அந்த வேலைக்கே செலவழிக்கப்படுகின்றதா என்பதை அப்பகுதி மக்களே கண்காணித்துக்கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னிருந்துஉப அலுவலகத்துடன் இணைந்திருந்த சுண்டிக்குளம் போக்கறப்பு, முள்ளியான், வெற்றிலைக்கேணி கிராம சேவை அலுவலர் பிரிவுகளை யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி கிழக்கு பிரதேச சபையுடன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் இப்பகுதியின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்க ஆவன செய்யப்படுமெனவும் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சென்ற கிராமங்களில் பொது ஸ்தாபனங்கள் மகஜர் சமர்ப்பித்தது தங்கள் குறைகள் கஷ்டங்களையும் எடுத்துக் கூறினர்.

ஆணையாளருடன் வேலை மேற்பார்வை அத்தியட்சகர், வடமராட்சி கிழக்கு பொறுப்பாளர் திரு. விஜு அவர்கள் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் ஆகியோரும் ஒவ்வொரு கிராமத்திற்கும் விஜயம் செய்து மக்கள் குறைகளை கேட்டறிந்தனர் (18

## குற்றச்செயல்

பிலியந்தல என்னும் இடத்தில் நிலத்திற்கு அடியில் அமைக்கப்பட்ட அச்சுக்கூடம் ஒன்றினை பாதுகாப்புப் படையினர் முற்றுகையிட்டனர்.

அதே தினம் ஆயுதம்தாங்கிய கோஷ்டியினரால் கண்டியில் உள்ள நிதி நிறுவனத்திலிருந்து 450,000 ரொக்கப்பணமும் கொள்ளையிடப் பட்டுள்ளது.

# ஐ. நா. சங்க யாழ் கிளையினால் பூகோளப்பட அன்பளிப்பு

இன்று உலகம் பூராவும் ஏறத்தாழ நூறு கோடி வயது வந்தோர் எழுத வாசிக்கத் தெரியாதோராக உள்ளனர். அதே போல் பத்துக்கோடி பாடசாலை செல்லும் வயதடைந்த சிறுர்கள் கற்கும் வசதியற்றோராக உள்ளனர் இவர்கள் இருபத்தோராம் நூற்றாண்டின் எழுத வாசிக்கத் தெரியாத வயது வந்தோர் தொகையின் மேலதிக அதிகரிப்பாவர்.

இந்த அவல நிலையைக் கருத்திற் கொண்டு உலகில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1990ம் ஆண்டை எழுத்தறிவாண்டாக பிரகடனம் செய்து இதனை வழி நடத்தும் முன்னோடியாக ''யூனெஸ்கோ ஸ்தாபனம்'' செயல்படுகிறது. இதன் பிரகாரம் இவ்வாண்டு உலகு பூராவும் எழுத்தறிவு கற்பித்தல் நடவடிக்கைகளைச் சகல அரசுகளும் ஊக்குவிக்கும், செயல் திட்டங்கள் நடைமுறையிலுள்ளன. அரசு சார்பற்ற பொது ஸ்தாபனங்களும் இத் திட்டங்களில் பங்களிப்புச் செய்கின்றன.

இலங்கை ஐக்கிய நாடுகள் சங்கத்தின் யாழ்ப்பாணப்பிரிவுசு ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட வகுப்பறையில் தொங்க விடப்படும் பூகோளப் படங்களை இங்குள்ள பாடசாலைகளுக்கு வழங்க முன்வந்துள்ளன. இவைகள் இந்த ஆண்டின் இரண்டாம் தவணைக்காகப் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்ததும் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலயம் நெடுந்தீவுமகா வித்தியாலயம், இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் மகா வித்தியாலயம், கனகரத்தினம் மகா வித்தியாலயம், இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி நயினாதீவு மகா வித்தியாலயம், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி, புங்குடுதீவு சிறி சித்திவிநாயகர் மகா வித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, கோப்பாய் கொத்தணி பாடசாலை ஆகியவற்றுக்கு இப் பூகோளப் படங்கள் வழங்கப்படவுள்ளன.

# கிளி. ரேட்றிக்கோமைதானத்தை பாவனைக்குதிறக்க கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான மைதானமான ரேட்றிக்கோ விளையாட்டு மைதானத்தை இராணுவத்திடமிருந்து பெற்றுத தருமாறு பிரதேசசபை விசேட ஆணையாளர், கிளி அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விளையாட்டு மைதானம் கடந்த பல வருடங்களாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருகிறது. இதனால் விளையாட்டுத் துறை பாதிக்கப்படுவதுடன் மாவட்ட ரீதியிலான பெரும் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்குக் கிராமப் புறங்களையே நாடவேண்டியுள்ளதாகவும் எமது பாரம்பரிய கலாசாரத்தைப் பேணுவதற்கு இவ் விளையாட்டு மைதானம் ஓர் முக்கிய இடம் எனவும் இதைப் பொதுமக்களின் பாவனைக்கு வழங்க வேண்டும் எனவும், எனவே மைதானத்தைப் பெற்றுத்தருமாறும் பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு எஸ். வேலுப்பிள்ளை கேட்டுள்ளார். (35)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பலாலி, மட்டு. விமான நிலைய விஸ்தரிப்பு

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது

நான்கு வருடங்களுக்கு முன் இந்த விமான நிலையம் ஆயிரம் ஏக்கர் காணியால் ஏற்கனவே விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்னமும் இந்தக் காணிக்குள் இருந்தவர்களுக்கு, நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

இவர்களின் காணிகளுக்குப் பதில் காணிகள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் மீண்டும் சில மாதங்களுக்கு முன் மேலும் 500 ஏக்கர் காணி விஸ்தரிப்பிற்கென அரசால் சுவீகரிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்த 500 ஏக்கர் விமான நிலைய விஸ்தரிப்பு நிறுத்தப்பட்டது.

விமானப்படைத் தளபதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலேயே இப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பைப் போன்றதே பலாலி விமான நிலைய விஸ்தரிப்பும்.

பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச தரத்திற்குத் தரம் உயர்த்தப் போவதாகப் பல தடவைகள் கடந்தகால அரசுகள் நப்பாசை காட்டி வந்தன.

# இதயநாதம்

**சனிக்கிழமை 28-.04-1990**

**நல்வாக்கு**

தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடு எனில் இனிக் கை விரியோம.
-பாரதிதாசன்

**ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்**

விமானம் ஏற வசதியாக அருகே கடலையும், வெளியையும் கொண்டு இயற்கையான கற்பாறை விமான ஓடு தளத்தையுடைய பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்துமாறு பல நாடுகள், அபிவிருத்தி உதவி வங்கிகள் தெரிவித்திருந்தன.

ஆனாலும் அரசு வெறும் வாய்ச் சொல்லில் மட்டுமே தரம் உயர்த்தலைப்பற்றிக் கூறி வந்தது.

வெளிநாட்டு உதவியுடன் 1980-ல் கட்டப்பட்ட அழகான கட்டடம் ஒன்று இன்னமும் திறக்கப்படாமல் உள்ளது.

இது விமானங்கள் நிறுத்தித்திருத்துவதற்கெனக் கட்டப்பட்டது.

இதில் விமானப் படையினரே தற்போது தங்கியுள்ளனர். உண்மையில் அரசிற்குப் பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் எண்ணம் இல்லை.

பலாலி இராணுவ முகாமையும், விமானப் படைத் தளத்தையும் விஸ்தரிக்கவே இந்தப் பசப்புவார்த்தையை அடிக்கடி கூறி வருகிறது.

ஏற்கனவே பலாலி விமான நிலையத்திற்கெனப் போதுமான, தாராளமான காணிகள் உள்ளன.

இவற்றை விடுத்து மேலும் காணிகள் பிடிப்பது என்பது தேவையற்றது.

இருந்த போதும் மூன்று வருடங்களுக்கு முன் விமான நிலைய விஸ்தரிப்புக்கென்று கூறி நூற்றுக் கணக்கான மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன.

இந்த அபகரித்த பிரதேசத்துக்குள்ளே தான் பலாலி ஆசிரிய கலாசாலை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இரு பாடசாலைகளும், மூன்று கோவில்களும் உள்ளன.

இங்கிருந்து விரட்டப்பட்ட மக்கள் இன்னமும் அனுதரவான நிலையிலேயே அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் 90 வீதமானோர் விவசாயத்தை நம்பி வாழ்பவர்களே.

விமான நிலையத்திற்கு உண்மையில் மேலதிகக் காணி தேவையில்லாத நிலையில் சுவீகரிக்கப்பட்ட இந்தக் காணிகள் உடனடியாக மக்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

பலாலி ஆசிரியர் கலாசாலையையும் உடன் பழைய இடத்தில் திறந்து ஆரம்பிக்க வேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் அவா.

# காதலரே காதலில் உங்கள் குணம் எப்படி?

# கவனம்! பிறந்ததிகதி உண்மையை அம்பலமாக்கும்

டாக்டர் டேவிட், ஜூலி இருவரும் ஜோசியததில் வித்தகர்கள் ஒருவரின் காதல் உயர்வானதா, கீழ்த்தரமானதா? ஆத்மார்த்தமானதா, போலியானதா, நிரந்தரமானதா, நீர்க் குமிழி போன்றதா? என்பதை அறிய ஒருவரின் நிஜ பிறந்த தேதியே போதுமானது, என்கிறார்கள்.

இப்பிறந்த தேதியே காதல் எண்ணின் பிறப்பிடம், எனவே ஒருவரின் காதல் எண்ணைக் கண்டு பிடித்து விட்டால் அவர்களின் காதல் ஆழத்தை, குண நலன்களை, உண்மைச் சொரூபத்தை, வருங்காலத்தை அறிந்து விடலாம்; காதல் எண்ணை அறிய விளக்கம் இதோ.

ஒருவரின் பிறந்த தேதி 2-2-1969 என்று வைத்துக் கொண்டோமானால் அந்த எண்ணின் லவ் நம்பர் 2. எப்படி? முதலில் அந்தத் தேதியை 2 சக 2 சக 1 சக 9 சக 6 சக9 என்று எழுதிக் கூட்ட வேண்டும். இதன் கூட்டுத்தொகை 29 இதையும் 2 சக 9 என்று எழுதிக்கூட்ட வேண்டும். வரும் எண் 11 இதையும் 1சக1 என்று கூட்டினால் தொகை இரண்டுஎன்று வரும். இதே தினுசில் உங்கள் பிறந்த தேதியைக் குறித்துக் கொண்டு லவ் நம்பர் கண்டு பிடிக்கவும்.

### லவ் நம்பர் ஒன்று

(சின்னம் — மான்)

பெண்-வாழ்க்கையை நுனிக் கரும்புவரை சுவைத்திட ஆர்வமுள்ளவர். வரப்போகும் கணவர் தன்னைவிட. எல்லா அம்சங்களிலும உயர்ந்து நிறக வேண்டுமென்று எதிர்பார்ப்பவர். அப்படிப்பட்டவரை ஆராதனை செய்யத் தவறமாடடீர்கள். லட்சியப் போக்கும் சாதுர்யமும், நகைச்சுவையும் நிரமபியவர்.

ஆண்-காதல் கல்யாணத்தில் நிறைய தோல்வி காண்பீர்கள், ஆனால் நீங்கள் மனைவியிடத்தில் விசுவாசததோடும், பெருந்தன்மையோடும், நன்றியுணர்ச்சியோடும், இருப்பீர்கள். படுக்கையில் மனைவி நல்ல ஒத்துழைப்பை அளிப்பாள். மனைவியின் நடத்தையைக்கலர் கண்ணாடி கொண்டு பார்க்காமல் இருந்தால், வாழ்க்கை 'சொர்க்கம்தான்' மண்டை கனத்தையும் தவிர்த்தால் 'எல்லாம் இன்ப மயம்' என்று பாடலாம்.

### லவ் நம்பர் இரண்டு

(சின்னம் - பட்டாம் பூச்சி)

பெண்-கணவர்எள் கொண்டு வா என்றால் 'எண்ணெய்' இதோ என்று சொல்லும் சுபாவம் உடையவர். அடிக்கடி உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் தொட்டாற் சிணுங்கி நீங்கள். உங்கள் ஒவ்வொரு பணியையும் உங்கள் அலங்காரத்தையும் உங்கள் கணவர் அல்லது காதலர் வாய் நிறைய மெச்சவேண்டுமென்று எதிர்பார்ப்பவர் நீங்கள். நல்ல நகைச்சுவை நிரம்பியவர் நீங்கள் இருக்கும் இடத்தில் சதா சர்வ காலமும் கலகலப்புத்தான்.

ஆண் நீங்கள் ஒரு காதல் மன்னன் அதோடு உங்கள் காதலியின் முறையீடுகளை அனுபவத்தோடு கேட்டு தீர்வு காண தவறமாட்டீர்கள். மனைவியின் உடல் சுகத்தைப் பெறச் சந்திரனைச் கூடக்கையில் பிடிக்க முயல்வீர்கள், ஆனாலும் கொஞ்சம் பொறுமைக்குணமுண்டு.

### லவ் நம்பர் மூன்று

(சினனம்-மீன் தின்னி பிராணி)

பெண் ஆண்மைநிறைந்தவனையே எதிர்பார்ப்பீர்கள் அழகுகூட இரண்டாம் பட்சம்தான். நாகரிகத்தை எதிர்ப்பீர்கள். வீட்டுப் பணியுடன் வெளிப் பணியையும் திறம்பட வகிக்கக் கூடியவர். 'உச்சி மீது' வானிடிந்து வீழினும், அச்சமில்லை அச்சமில்லை என்ற பாரதியின் பாட்டிற்கு இலக்கணம் நீங்களேதான்.

ஆண் ஓர் உத்தம புருஷனின் கல்யாண குணங்கள் அத்தனையும் பொருந்தியவர். எல்லோருக்கும் பரிசுகளையும் பண்டங்களையும் வாரிவழங்கும் 'கர்ணன்' எல்லா விஷயங்களையும் பேதமின்றி விளையாட்டாகவே எடுத்துக் கொள்வர். சுவையான பேச்சாளர் 'பொறுமை' என்றால் அது என்ன விலை, என்று கேட்பவர்.

### லவ் நம்பர் நான்கு

(சின்னம் - தேனீ)

பெண் உங்களை நேசிப்பவரிடம் விசுவாசமுள்ளவராகவும், நன்றியுள்ளவராகவும், அனுசரணையுள்ளவராகவும் இருப்பீர்கள். நீங்கள் இருக்கும் இடத்தில் கும்மாளமும் வேடிக்கையும் சிரிப்பும் தான்.


ஆண் நீங்கள் உணர்ச்சி வசபபடும் 'டைப்' முன் யோசனையுடையவர். குழந்தைகளையும், மனைவியையும் அதிகமாக நேசிப்பவர் விசால மனமும் பெருந்தன்மையும் நிறைந்தவர். உங்கள் மனத்தைப் பறி கொடுத்தவருக்காக உயிரைக் கூடத் தியாகம் செய்யத் தயங்காதவர், பரிபூரண சுதந்திரத்தை வழங்குபவர் உங்களைக் கணவராக அடைய ரொம்பக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

### லவ் நம்பர் ஐந்து

(சின்னம் - குருவி)

பெண் பெண்மை பரிபூரணமாகக் கொண்டுள்ளவர். இவரை மனைவியாக அடையப் போகிறவர் ரொம்பவும் அதிர்ஷ்டசாலிதான். உலகை ஒரு சுற்று சுற்றிவர பேராசை கொண்டவர், யாராவது சுவையாகச் சமைத்து வைத்தால் நாக்கை நொட்டை விட்டுக் கொண்டு சாப்பிடத் தயாராகும் உங்களுக்கு சமையல் வீட்டு வேலை என்றால் எட்டிக் காய்தான். இவளை மனைவியாக அடைந்த நான் சந்தேகமில்லாமல் பாக்கியசாலி தான் என்று உங்கள் கணவர் நினைக்கும் அளவிற்கு நீங்கள் 'ஜாக்பாட்'

ஆண் பெண்களிடையே நீங்கள் ரொம்பவும் 'பாப்புலர் டைப்' உங்கள் பார்வைக்காக ஏங்கும் பெண்கள் ஏராளம் உங்களின் போக்கு எதிர்த்தரப்பினருக்கு அதிர்ச்சியையும் அளிக்கலாம். ஆனந்தத்தையும் அளிக்கலாம் உங்களுக்கு வாழ்க்கை ஒருசவால் தான்.



### லவ் நம்பர் ஆறு

(சின்னம்வ-ாத்து)

பெண் குப்பை மேட்டைக் கூடக் கோவிலாக்கும் கலைநயம் படைத்தவர். 'என் கணவர் என் குழந்தைகள் தான் உலகம்' என்று வாழ்ந்து காட்டக் கூடிய உண்மையான தாய் நீங்கள். அது அதனதன் இடத்திலிருக்க வேண்டும் என்பதில் தீவிரம் காட்டுவீர்கள். 'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற கொள்கையால் கணவனைத் திக்கு முக்காட வைப்பீர்கள் ஓர் ஆதர்ச மனைவி என்பதற்குண்டான அத்தனை தகுதிகளையும் கொண்டவர்.

ஆண் காதல் பவித்திரமானது. பெண்ணை மலரெனக் கையாளும் பாங்குடையவர். உடலைக் காயப்படுத்தக்கூட உங்கள் மனம் இடம் கொடுக்காது. அழகை ஆராதனை செய்யும் அதே சமயத்தில் கவிதைகளையும் எழுதித் தள்ளுவீர்கள். 'மஞ்சளனே மங்கையின் பாக்கியம்' என்ற வாசகம் உங்களுக்காகவேதான்.

### லவ் நம்பர் ஏழு

(சின்னம் -ஆந்தை)

பெண் உடுப்பது, உண்பது, பேசுவது, காதலிப்பது எல்லாமே ஏனோதானோ தான். பணம், பதவி, பகட்டு எல்லாமே உங்களுக்கு அநாவசியம் தான்... சராசரிப் பெண்ணின் ஆசாபாசங்களிலிருந்து வேறுபட்டுத் தனித்து நிற்கும் அபூர்வப் பிறவி நீங்கள். எந்த ஒருவிஷயத்திலும கட்டுப்பாடற்ற தனிபபிறவி நீங்கள். வெளி வேஷம் போடத் தெரியாத வெகுளி 'டைப்' நீங்கள் மற்றவர்களின் கருத்துத் திணித்தலை ஒதுக்கி, தன்னிச்சையாக நீங்கள் செயல்படும் பொழுது அடங்காப் பிடாரி என்ற பட்டத்தைப் பெறுவீர்கள்.

ஆண் சதாசர்வ காலமும் கற்பனையுலகில் சிறகடித்துப் பறக்கும் 'டைப்' அதோடு சதா புத்தகமும் கையுமாய் காரணகாரியத்தில் ஆராய்ச்சியில் மூழ்கிவிடுவீர்கள் ஒரு பெண் உங்களைக் காதலிக்க நேர்ந்தாலும் அவள் என்னை ஏன் காதலித்தாள்' எந்த அம்சம் பிரதானம், எந்த அடிப்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# போதையில் இருந்தால் வேலை காலியாகும்

மதுபோதை, போதைவஸ்துக்கள் உபயோகித்தல் சம்பந்தமாக அரசாங்க நிர்வாக மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு, அரச உத்தியோகத்தர்களுக்குப் பலத்த கட்டுப்பாடுகளை விதித்துள்ளது ஒரு உத்தியோகத்தர் கடமையில் இருக்கும் போது, அல்லது கடமை ஒழிந்த நேரத்தில் அலுவலகச் சுற்றாடலில் மதுபோதையில் அல்லது மதுநாற்றம் உடையவராய்- போதைவஸ்துக்களைப் பாவித்திருப்பவராய்க் காணப்படுவது அவ் உத்தியோகத்தரை ஒழுங்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தும் என்றும், அவ்வாறான உத்தியோகத்தர் ஒருவர் இழைத்த தவறுக்குக் குற்றவாளியாகக் காணப்படின் நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் சேவையிலிருந்தும் நீக்கப்படுவார் என்றும் மேற்படி அமைச்சு சுற்றறிக்கை மூலம் சகல அமைச்சுக்களின் செயலாளருக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும், கூட்டுத்தாபன தலைவர்களுக்கும் அறிவித்துள்ளது. (47)

# இலவசக் கல்விவாய்ப்பில் தமிழ் இளைஞர் அசட்டை

மேற்கு ஜெர்மனியிலுள்ள 60 பல்கலைக்கழகங்களில் இலவசக் கல்வி வாய்ப்புக்கள் சுய உழைப்புடன் இருந்தபோதிலும் தமிழ் இளைஞர்கள் அதில் நாட்டமின்றிக் காணப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கு ஜேர்மனியின் 60 பல்கலைக்கழகங்களில் வருடாந்தம் 120 இலட்சம் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த மொத்த எண்ணிக்கையில் 8 சதவீதம் வெளிநாட்டு மாணவர்களாவர்.

இதில் 100 ஈழத் தமிழ் மாணவர்களே தற்சமயம் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்கு இலவசக் கல்வி வசதி அளிக்கப்படுவதோடு ஏனைய வசதிகளுக்குத் தேவையான பணத்தை உழைப்பதற்காக பகுதிநேர தொழில் செய்யவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

# மருதடி வீதியிற் குண்டும் குழியும்! மனிதர்கள் தெருவுக்கு முத்தம்!

நல்லூர் தெற்கில் மருதடி வீதியில் பாரிய குண்டும் குழியும் காணப்படுவதால் பொதுமக்களும் வாகனங்களும் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மருதடி வீதியில் அமைந்துள்ள கிராமசேவை அலுவலரின் அலுவலகத்திற்கு அருகில் பாரிய குண்டு ஒன்று ஏற்பட்டுள்ளது. இரவு நேரங்களில் வருவோர் இந்த குண்டினுள் விழுந்து எழும்புகின்றார்கள்.

இவ்வீதியை புனரமைப்பு செய்யும்படி அப்பகுதிமக்கள் மாநகரசபையினருக்கு அறிவித்துள்ளனர். பாடசாலை மாணவர்களுக்கும், அரச அலுவலகர்களுக்கும் இவ்வீதி கூடுதலாக பயன்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (03)

# 'தர்ம நெறிக்காக தன்னையே ஈந்தவர் அருளப்பர்'

நோன்புத் தவத்தாலே உள்ளத்திலே உறுதி வாய்க்கப் பெற்றவர் அருளப்பர். இந்த புரட்சித் துறவி, மண்ணரசன் ஏரோதை மண்டியிட மறுத்துத் தான் கட்டுரைத்த தரும நெறிக்காகவே தலை வெட்டப்பட்டு மரித்தவர். இந்தச் சத்தியவாதி சஞ்சுவாமின் கதையைத் தான் சத்தியசீலன் உருசித்துப் பாடியிருக்கிறார். இங்கே காட்சிக்கு வைக்கப் பட்டிருந்த 'நத்தார் விசனம்' போன்ற பத்திரிகைப் பாடல் நறுக்குகளிலும் சத்தியசீலனின் சத்திய வேட்கை தான் தொனிக்கிறது. 'மிஸ்ரிக்கல் விஷன்' என்ற அந்தப் பெருநிலை இன்னும் வாய்க்கப் பெறவிட்டாலும் பல அம்சங்களில் ஆங்கிலக் கவிஞன் பிளேக்குடன் ஒப்பிடக் கூடியவராகத் திகழுகிறார் கவிஞர் சத்தியசீலன்."

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையில் இடம்பெற்ற அல்லைப்பிட்டிப் பதி அருளப்பர் அம்மானை இலக்கிய நூல் வெளியீட்டு விழாவிலே நூலை வெளியிட்டு வைக்கும்பொழுது யாழ் பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளரும், 'பாக்ஸ் கிறிஸ்ரி' சர்வதேச சமாதான அமையத்தின் இலங்கைத் தலைவருமான சுவாமி ஜெடசீலன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# வடபகுதியில் கடும் வரட்சி; பயிர்கள் பெரும் பாதிப்பு

வடபகுதியில் கடும் வரட்சியால் பயிர்களுக்கும், கால்நடைகளுக்கும் வடபகுதியில் பெரும் பாதிப்புஏற்பட்டு வருகின்றது.

மிளகாய், பயற்றை, வெண்காயம், வாழை என்பன பெரு பாதிப்படைந்துள்ளன.

மிளகாயில் சுருள் நோய், பயற்றையில் அழுக்கணவன் நோய், வாழையில் உருக்கன், வெண்காயத்தில் நுனிக்கருகல் நோய் என்பன பயிர்களை அழித்து வருகின்றன.

கடும் வரட்சியும், சித்திரை பெரு மழை இன்மையும் இதற்குக் காரணம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# சங்கீத சபை இசைப் பரீட்சை

வட இலங்கை சங்கீத சபையினர் நடத்தும் இசைப் பரீட்சைகளுக்கான எழுத்துத்தேர்வு அடுத்த மாதம் பன்னிரண்டாம், பதின்மூன்றாம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்போது நடைபெற்றுவரும் செயல்முறைத் தேர்வு நடைபெற விருக்கும் எழுத்து முறைத்தேர்வுகளின் பெறுபேற்றின் அடிப்படையிலேயே இப்பரீட்சையின் இறுதிப் பெறுபேறுகள் அமையவிருக்கின்றன.

### பாராளுமன்றத்தில் வெளிநாட்டமைச்சர்

# சார்க் மாநாடு நடப்பது இலங்கையில் என்பது உறுதி

"சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்தப்போகிறோம். அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன" என்று வெளிநாட்டமைச்சர் திரு. ஹெரோல்ட் ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அவர் மேலும் பேசுகையில்" இந்நிலையில் மாலைதீவில் நடைபெறும் மாநாட்டில் நாம் கலந்து கொள்வோமா? இல்லையா? என்ற கேள்விக்கு இடமில்லை" என்றார் அவர்.

சுதந்திரக்கட்சி எம்.பி. திரு. தர்மசிறி சேனநாயகா சார்க்மாநாடு தொடர்பாகச் சபை ஒத்திவைப்பு வேளையில் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்.

"இலங்கையில் சார்க் மாநாட்டை நடாத்த அங்கத்துவ நாடுகள் விரும்பாவிடில் மாலைதீவில் நடைபெறும் மாநாட்டை இலங்கை பகிஷ்கரிக்குமா; என சு. க. எம். பி. தனது கேள்வியிற் கேட்டார்.

அமைச்சர் பதிலளிக்கையில் "5-வது சார்க் மாநாட்டைக் கடந்த வருடம் இலங்கையில் நடத்தமுடியவில்லை. இந்தியப் படை நிலைகொண்டிருந்ததே இதற்குக்காரணம். தற்போது இந்தியப்படை நாட்டில் இல்லை. எனவே மாநாட்டை இங்கு நடத்த ஏற்பாடு செய்கிறோம். தலைமை நாடான பாகிஸ்தானிடமும் இது பற்றித் தெரிவித்துள்ளோம்" என்றார்.

இலங்கையில் மாநாடு நடக்காவிடில் மாலைதீவு மாநாட்டைப் பகிஷ்கரிப்போம் என முன்னாள் அமைச்சர் கூறியுள்ளாரே எனத் திரு. சேனநாயகா கேட்டபோது இப்போது நான் பதிலளிக்கிறேன் என்றார் அமைச்சர்.

# நல்லூர் தெற்கு ச. ச. நிலைய 41வது ஆண்டு விழா

நல்லூர்தெற்கு சனசமூக நிலைய 41வது ஆண்டுநிறைவு விழா இவ்வருடம்மிகவும்சிறப்பாக இடம் பெறவுள்ளது.

இவ்விழாவின் கலைப் போட்டிகள்யாவும் 28ம், 29ம் திகதிகளில்நடைபெறவுள்ளன. இறுதி நாளான மே 9ம்திகதி பௌர்ணமியன்று மரதன் ஓட்டப் போட்டியும், விளையாட்டுப் போட்டியும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

# வயவை பிள்ளையார் மகோற்சவம்

வயாவிளான்- மானம்பராய் அருள்மிகு பிள்ளையார்கோயில் மகோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் விமரிசையாக ஆரம்பமாகிறது.

பத்துத்தினங்கள் இவ்வுற்சவம் சிறப்பாக நடைபெற விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# கைக்கடிகாரம் உங்களுடையதா?

'பெண்களுக்குரிய ,சிற்றிசன்' கைக்கடிகாரமொன்று நாவற்குழியைச் சேர்ந்த ம கிரிதரன் என்பவரால் நாவற்குழியில் கண்டெடுக்கப்பட்டுமுரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் முரசொலி ஆசிரிய பீடத்தில் தகுந்தஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளலாம்.

# அலுவலகம் இடமாற்றம்

இதுவரை காலமும் வட்டுக்கோட்டை சந்தியில் இயங்கி வந்த மின்சாரசபையின் வட்டுக்கோட்டைப்பிரதேச அலுவலகம் தற்போது சித்தன்கேணி சந்திக்கருகாமையில் உள்ள தனியார் கட்டிடமொன்றிற்கு இடமாற்றப்பட்டுள்ளது. 30)

# சேவை ஓய்வு

யாழ். செயலக சமூக சேவைப் பிரிவில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. வி. வி. வரதராசன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவருடையஇடத்திற்குசாவகச்சேரி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் கடமையாற்றிய திரு. எம். கே. கேதீஸ்வரன் அவர்கள் கடமையேற்றுள்ளார். (47)

### ஊனமுற்றோர் விடுதி அமைக்க

# கனேடிய தர்ம ஸ்தாபன அன்பளிப்புக் கிடைத்தது

கிளிநொச்சி கருணா நிலையத்தில் வலது குறைந்தோருக்கான விடுதியொன்றை அமைப்பதற்கு "சீடா" என்னும் கனேடிய தர்மஸ்தாபனம் ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

விடுதி அமைக்கும் வேலைகள் மிகவும் துரித கெதியில் நடைபெற்று வருகின்றன. இவ்விடுதியின் திறப்பு விழா மிகவும் விரைவில் நடைபெறவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை கருணா நிலையப் பொறுப்பாளர் திருமதி எமேசனு, கருணா நிலைய பரிபாலனக்குழுவினரும் செய்து வருகின்றனர்.

இந்த விடுதியை அமைப்பதற்கு வேண்டிய நிதியை அன்பளிப்புச் செய்த சீடா என்னும் கனேடிய தர்மஸ்தாபனத்திற்கு கருணா நிலையப் பரிபாலனக் குழுவினர் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். இந்த ஸ்தாபனம் இதுபோன்ற அநேக ஸ்தாபனங்களுக்கு நிதியுதவியளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# மண்டைதீவு வீதி சேதமுற்ற நிலையில்

மண்டைதீவு- யாழ்ப்பாணம் பிரதான வீதி தொடர்ந்து திருத்த வேலைகளும் செய்யப்படாததனால் இப்பகுதி மக்கள்போக்குவரத்து செய்வதற்கு மிகுந்த அசௌகரியங்களை அடைந்து வருகிறார்கள். இந்த பிரதான வீதிச்சீர் கேட்டினால் மண்டைதீவு, யாழ்ப்பாணம் பேருந்து சேவைகளை நடாத்த முடியாத நிலையும் இருந்து வருகிறது. (24)

# தவநிலை நீங்குமா?

யாழ் நகரிலிருந்து ஊர்காவற்றுறைப் பகுதிக்கு போக்குவரத்துச் சேவைகளை மேற்கொண்டு வரும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் ஒழுங்காக அப் பகுதிகளில் சேவைகளை மேற்கொள்ள வில்லையென மக்கள் பெரும் கவலை தெரிவித்து வருகிறார்கள்.

மேலும் அப் பகுதிகளால் ஒழுங்காக சேவைகளை மேற்கொள்வதில்லை. நினைத்த நேரங்களில் ஏனோ தானோ என்ற மனப் போக்கில் சேவைகள் நடைபெறுகின்றன

பிரயாணங்களை மேற்கொள்ளுவதற்காக வீதிகளில் மக்கள் கூட்டங் கூட்டமாக நின்று ஏமாற்றத்துடன் பல சிரமங்களுக்கு மத்தியிலும் வீடு திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அதுமட்டுமல்லாமல் அரசாங்க ஊழியர்கள், தனியார் ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் வீதிகளில் நின்று பஸ்ஸைப் பார்த்து தவங் கிடக்கிறார்கள்.

# காதலரே...

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

படையில் காதலித்தால் என்ற ஆராய்ச்சியில் மூழ்கி அனுபவிக்க வேண்டியதையெல்லாம் கைநழுவ விட்டுவிடுவீர்கள். திருமண வாழ்வு வெற்றியடைவது அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

## லவ் நம்பர் எட்டு

(சின்னம்—எறும்பு)

பெண் — கலை பொருந்திய கவர்ச்சி நிரம்பிய முகம். முதல் சந்திப்பில் நீங்கள் திமிர் பிடித்தவர் போன்று பழகுவீர்கள், ஆனால் பழகப் பழகத் தான் நீங்கள் இனியவர் என்று நிரூபிப்பீர்கள் இஷ்டப்பட்டதை அடையத் தவறமாட்டீர்கள். அதிகாரமும் பணமும் உள்ளவரைத்தான் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். நீங்கள் உணர்ச்சி வசப்படும் போது ஒருவரை இமயமலையின் உச்சியில் கொண்டு உட்காரவும் வைப்பீர்கள். அல்லது அவரை அதன் பாதாளத்திலும் தள்ளுவீர்கள்,

ஆண் — காதலுக்காக சாம்ராஜ்யத்தை இழந்த வின்ஸ்டர் கோமகனை உங்களுக்கு ஒப்பிடலாம். நல்ல தாம்பத்தியத்திற்கு நந்தியாக நிற்பது உங்கள் பொறுமைக் குணம் தான். சமூக அந்தஸ்திலும் பொருளாதார மட்டத்திலும் உயர்ந்து நிற்கும் நீங்கள் சொர்க்க வாழ்க்கை அடைவீர்கள். வெற்றிகளும் தோல்விகளும் அடுக்கடுக்காக எதிர்ப்பட்டாலும் சிறிதும் மனம் தளராமல் இலட்சிய வாதியாகச் செயல்பட்டு வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடித்து விடுவீர்கள். நீங்கள் பிறக்கும்போதே சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் உங்களுடன் ஒட்டிக்கொண்டிருந்தால் நீங்கள் வெற்றித் திருமகனாக விளங்குவதில் வியப்பில்லை.

## லவ் நம்பர் ஒன்பது

(சின்னம் கீரிப்பிள்ளை)

பெண் —இவளுடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை தான் சொர்க்கம் என்று துணைவர் கூறுமளவிற்கு நீங்கள் சலிப்பைத் தராதவர். காதலுணர்ச்சி மிக அதிகமாக உள்ளவர். பள்ளி நாள் நட்பையும் பள்ளியறை நட்பையும் எப்பொழுதும் நிறுத்திக்கொள்பவர்.

ஆண் — உங்களது ஏக பத்தினி விரதத்திற்கு பங்கமேற்படுத்த அனேக சூழ்ச்சிகள் வீசப்படும், கவனம் தேவை. விசுவாமித்திரர் — மேனகையை நினைவில் கொண்டு உங்கள் வாழ்க்கைத் துணையினை எல்லா வகைகளிலும் திருப்தி செய்வீர்கள். எறும்பின் சுறுசுறுப்போடு இலட்சியத்தோடு உறுதியோடு செயல்பட்டு அடைய வேண்டியதையெல்லாம் அடைவீர்கள். எந்தப் பணியை ஒப்படைத்தாலும் திறம்பட நிர்வகித்து 'நல்ல நிர்வாகி' என்ற பாராட்டைப் பெறுவீர்கள். அரசியலில் நுழைந்தால் மக்கள் அபிமானத் தலைவனாகக் கொடிகட்டிப் பறக்கலாம்.

நன்றி: மங்கையர் மலர்

# நள்ளிரவு 12 மணிக்கு தினசரி சைக்கிள் ஓட்டப்போட்டி
# 'கமோன்' சொல்லயாருமில்லை, தண்ணீர் ஊற்றுவாருமில்லை!


கடிகாரம் நள்ளிரவு பதினொரு மணி நாற்பத்தைந்து நிமிடம் என சுட்டிக்காட்டுகிறது...... புறப்படுகின்றோம். எங்கே...? யாழ்ப்பாண தபாற்கந்தோர் தற்போது இயங்கும் இடத்திற்கு.. இருபத்துநான்கு பேர் தபாற் கந்தோருக்கும பாலசபைக்கும் இடைப்பட்ட

## நேரடி ரிப்போட்

சுவரோரத்தில் சாய்ந்தவாறு அமர்ந்திருக்கின்றனர்...

இந்த நேரத்தில் இவர்களுக்கு இங்கே என்னவேலை...

அருகிலுள்ள வீடுகள் பல உறக்கத்தில் மூழ்கியிருந்தன... ஊர் உறங்குகிறது... ஆனால் இந்த வாலிபர்களோ காலையில் வேலை கிடைக்க வேண்



வேளைவரும்; வேலை வரும்

டும் என்பதற்காக வீடுகளில் உறங்காமல் நள்ளிரவில்...வீதியோரத்தில் உறங்குகிறார்கள்.


கல் நெஞ்சக்காரனுடைய இதயத்தையே கலங்க வைக்கும் இக்காட்சியை... ஓ!... எப்படி வர்ணிப்பது......

வீட்டிலே தாய்தந்தையரிடம் வேலைக்குச் செல்கின்றோம்... என்று சொல்லிவிட்டு சாப்பாட்டுப் பாசலுடன் வருகின்ற இளைஞர்கள்...

விரைவில் இருள் அகலாதா? ...மீண்டும்... பிரகாசமான பொழுது மலராதா?... என எதிர்பார்ப்புடன் தபாற்கந்தோர் அமைந்துள்ள மதிலோரத்தில் காத்திருக்கின்றார்கள்.

பிச்சை எடுப்பவர்கள்தான் வீதியோரம்... உறங்குகிறார்களா?...இல்லை...உயிர் வாழ வேலை தேடுபவர்களும்... வீதியோரம்தான் உறங்குகிறார்கள் ..

வெளிநாடுகளில் நடைபெறுகின்ற அதிசயச் செய்தியா...! இல்லை...வடபகுதியில் ...கல்விக்குப் புகழ் பெற்ற... யாழ். நகரில் நடக்கும் சோகக் கதைதான் இது.



இரவிலும் இறங்க மறுக்கும் இமைகள்

இதுவரை எத்தனையோ 'நேரடி ரிப்போட்'களைத் தந்திருக்கின்றோம் அந்த நேரடி 'ரிப்போட்'கள் எங்கள் இதயத்தை... கல்லாக்கச் செய்தனவே தவிர கலங்கச் செய்யவில்லை.

எதிலுமேமகிழ்வைக்காணாத அந்த இளைஞர்கள் ...மதிலோரம் வீசும் காற்றில் கவலைகளைப் பறக்கவிட்டு உறங்கிக் கொண்டிருந்தனர் ......

ஒருவர் நேரத்தைப் பார்க்கிறார், கடிகாரத்தின் சிறிய முள் பதினொன்றுக்கும் பன்னிரண்டுக்கும் இடையிலும் பெரிய முள் பத்திற்கும் பதினொன்றுக்கும் இடையில் நிற்கிறது......

உறங்கிக் கொண்டிருந்த வாலிபர்கள் எல்லோரும் எழுந்து விட்டனர்......

சிலர் கண்களைக் கசக்க......

இன்னும்சிலர்...உடம்புக் களைப்பைப்போக்க... நெளிந்து வளைந்து நெட்டி முறிக்க......

ஒரு இளைஞர் அழத்தொடங்கினார்... பக்கத்தில் இருந்தவர் அவர் முதுகைத்தட்டி ஆசுவாசப்படுத்தினார்.

மதிலோரத்தில் அமைதியாகச் சாய்ந்தவாறு ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சைக்கிள்களை நிமிர்த்தி...... உருட்டிக்கொண்டு வாலிபர்கள் வீதிக்கு வருகின்றனர்.

இச்சம்பவம்......சைக்கிள் ஓட்டப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்...ஆரம்பப் போட்டிக்குச் செல்லும் காட்சியை நினைவுபடுத்தியது.

இருபத்துநான்கு வாலிபர்களும் சைக்கிளில் ஏறி கச்சேரிப் பக்கம் செல்கின்றனர் நாமும் பின் தொடருகிறோம்.

சைக்கிளில் செல்லும் வாலிபர் ஒருவர்...'சோதனை மேல்' சோதனை பேதுமடா சாமி...

என்றுபாட அவர்களில் வயது கூடிய ஒருவர்... வேதனைதான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி... என்று தொடர ஏனையவர்களும் சேர்ந்து... இப்பாடலைப் பாடியபடி செல்கின்றனர்.

பஸ்ரியன் சந்தியில் அவர்கள் சைக்கிளைவிட்டு இறங்குகின்றனர்.

நேரம் நள்ளிரவு பன்னிரண்டுமணி... தினமும் நள்ளிரவு... பன்னிரண்டுமணி ஐந்து நிமிடத்திற்கு சைக்கிள் ஓட்டப்போட்டி ஆரம்பமாகும்...

இந்த நள்ளிரவுச் சைக்கிள் ஓட்டப்போட்டி இந்திய அமைதிப்படை ஈழ மண்ணை விட்டுச் சென்ற நாள்முதல் நடைபெற்று வருகின்றது.

பஸ்ரியன் சந்தியிலிருந்து... மடத்தடி வரைக்கும் அதாவது யாழ். தண்ணீர்த்தாங்கி இருக்கும் இடம் வரைக்கும் உள்ள மக்களுக்கு சைக்கிள் ஓட்டப்போட்டியின் சோகக் கதை தெரியும்... ஆனால்...... ஏனையவர்களுக்குச் சோகத்தின் தொடர்கதை தெரியாது.

யாழ். தபாற்கந்தோரில் தபால் கொடுப்பதற்கு நிரந்தர ஊழியர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் உத்தியோக பூர்வமாக லீவு எடுக்கும் நாட்களில் சேவையாற்றுவதற்கு என சமயா சமய ஊழியர்களும் இருக்கின்றார்கள்.

இந்த சமயா சமய ஊழியர்களுக்கு நிரந்தர தபால் ஊழியர்கள் வராத பட்சத்தில் வேலை கொடுக்கப்படும். இவர்கள் வேலைக்குச் சேர்ந்த

**உதரன்**

ஒழுங்கு முறையில் எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய முறையில் சந்தர்ப்பம் சமமாகக் கொடுக்கப்படும்.


யாழ். தபாற்கந்தோரில் முப்பத்துநான்கு சமயா சமய ஊழியர்கள் இருக்கின்றார்கள். முன்கூட்டி அறிவித்து விட்டு நிரந்தர தபால் ஊழியர்கள் லீவு எடுத்தால் அந்த இடத்தை நிரப்புவதற்காகவே சமயா சமய ஊழியர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது.

இது இப்படியிருக்க ஏன் இந்த நள்ளிரவு வேளையில் சைக்கிள் ஓட்டப் போட்டி நடக்கிறது......சுற்றி வளைக்காமல் சொல்லுங்களேன்... என்று கேட்பது எம் காதுகளில் விழத்தான் செய்கிறது. அதற்கிடையில் அவசரப்பட்டால்......

ஒரு நிரந்தர ஊழியர் எதுவித முன்னறிவித்தலும் இன்றி கடமைக்கு வராவிட்டால் அவருடைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு இந்த சமயா சமய ஊழியர்களையே அழைக்கின்றார்கள். எந்த சமயாசமய ஊழியர் நேரத்திற்கு வந்து கையொப்பம் இடும் புத்தகத்தில் கையொப்பமிடுகிறாரோ அவருக்கு திடீரென அறிவிக்காமல் லீவு எடுத்தவருடைய கடமையைச் செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

நேரத்திற்கு வருபவர்களுக்குத்தான் முன்னுரிமை என்று சொன்னவுடன் அதிகாலையிலேயே தபாற்கந்தோர் வாசலில் வந்து சமயா சமய ஊழியர்கள் காத்து நிற்கத் தொடங்கி விடுகிறார்கள்.

ஒருவர் அதிகாலை நான்கு மணிக்கு இன்று வந்து விட்டால் இதைப்பார்த்த மற்றவர் மறுநாள் அதிகாலை மூன்று மணிக்கே வந்து தபாற்கந்தோர் வாயிலில் காத்து நிற்கில் கையெழுத்து இடவேண்டும் என்பதற்காவும், போட்டியில் பங்குபற்றுதவர்கள்



கமோன் ... றெடி... ..

கின்றார். இப்படி நீ முதல் நான் முதல் என்று சண்டை எழ நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கே வந்து தபாற்கந்தோர் மதிலோரம் உறங்கத் தொடங்கினார்கள் இந்த சமயா சமய ஊழியர்கள்.

பிரச்சனைகள் வலுவடையவே சமயா சமய ஊழியர்கள் தமக்குள்கூடிமுடிவெடுத்து சயிக்கிள் ஓட்டப் போட்டியை நள்ளிரவு நடத்தி அதில் வெற்றி பெறுபவர்கள் வெற்றி பெற்ற ஒழுங்கில் கையெழுத்திட வேண்டும் என்று தீர்மானித்தார்கள்

தொடர்ந்து ஒருவரே முதலாம் இடத்தைப் பெறும் வாய்ப்பு உண்டு அதுமட்டுமல்ல... நன்றாக ஓடமுடியாதவர் தொடர்ந்து... அதே தானத்தையேபெற்றுவார். இவருக்கு வேலை கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் மிக மிகக் குறைவு.


நல்ல நிலையில் இல்லாத சைக்கிள்கள் வைத்திருப்பவர்கள் உடல் வலிமையற்றவர்

அதிகாலையில் வந்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கையெழுத்திடுவதை தவிர்ப்பதற்காகவுமே இவர்கள் அதிகாலை வரை தபாற்கந்தோர்மதிலோரத்தில் காத்திருக்கின்றார்கள்.

சில வேளைகளில் பல நிரந்தர தபால் ஊழியர்கள் லீவு எடுத்தால் பல சமயாசமய ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இதனால் தொடர்ந்து நள்ளிரவு முதல் அதிகாலைவரை காத்திருக்கிறார்கள்.

சமயாசமய ஊழியர்கள் இப்படி சைக்கிள் ஓட்டப் போட்டி மூலம் கையொப்பம் வைக்கும் முறையை மேற்கொள்கின்றார்கள் என்ற விஷயம் பிரதமதபால் அதிபருக்கு மட்டுமல்ல பிரதேச தபால் அத்தியட்சகருக்கும் தெரியுமாம். அவர்கள் கண்டும் காணாதவர்கள் போல நடந்து கொள்கின்றார்களாம்.

சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றி பெறுபவர் அதாவது முதலில் கையொப்



வாழ்க்கைச்சக்கரம் சைக்கிள் சக்கரத்தில்

கள் சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றிபெற வாய்ப்புக்களே இல்லை.

இந்த சைக்கிள் ஓட்டப் போட்டியின் மூலம் திடீரென லீவு எடுப்பவர்களுக்காக தற்காலிகமாக கடமையாற்றும் சந்தர்ப்பத்தை பெறுவதற்காக கடைப்பிடிக்கப்படும் இம்முறை பிழையானது என்று

பம் இடுபவர் திடீரென அறிவித்தல்இன்றி லீவு எடுக்கும் நிரந்தர தபால் ஊழியர்களின் கடமையை செய்ய அழைக்கப்படுகின்றார்.

இது இப்படியிருக்க அறிவித்துவிட்டு லீவு எடுக்கும் நிரந்தர ஊழியர்களின் கடமைகளை தற்காலிகமாக செய்வதற்கு தபாலக அதிகாரிக

## இது ஒரு ராத்திரி ரவுண்ட் அப்

தெரிந்தும் சமயாசமய ஊழியர்கள் வேறு வழி இன்றி இந்த ஓட்டப்போட்டி முறையைக் கடைப்பிடிக்கின்றார்கள்.

ஓட்டப்போட்டி முடிந்தும் இவர்கள் வீடு செல்வதில்லை. ஓடி வெற்றி பெற்ற ஒழுங்

ளால், சம வாய்ப்பு அடிப்படையில் வேலை வழங்கும் போது சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற வாய்ப்பு இல்லாதவர்களுக்கு ஒரிரு நாட்களுக்கு கூடுத

— 7 ஆம் பக்கம் பார்க்க

சந்திரிகா - ஒஸி இரட்டை வேடம்

# ஐ. சோ. மு எதிர்காலம் பற்றி வேதனையே என்கிறார் 'கரு'

"ஐக்கிய சோசலிஸ முன்னணியின் எதிர்காலம் வேதனையாக உள்ளது" என்று நவலங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. விக்கிரமபாகு கருணாரத்ன கூறியுள்ளார்.

நவலங்கா சமசமாஜக் கட்சி தனித்து மே தினம் நடத்த வேண்டிய சூழ்நிலை உருவானது குறித்து திரு. வாசுதேவ நாணயக்காரவும் அவரும் பத்திரிகையாளர் மாநாடொன்றில் விளக்கினார்.

திரு.கருணாரத்ன கூறியதாவது "கம்யூனிஸ்ட் கட்சி சுதந்திரக்கட்சியுடன் இணைந்து மே தினம் நடத்த விரும்பியது. இதனை நாமும், மக்கள் கட்சி (ஒஸி) யும் விரும்பாததால் ஐ சோ. மு தனித்து மே தின விழாவை நடத்தத் தீர்மானித்தது.

ஆனால் சந்திரிகாவின் பிரிவினரையும் இணைத்து மே தின விழா நடத்த ஒஸி பிரிவினர் விரும்பாததால் அவர்கள் தனித்து நடாத்தத் தீர்மானித்தனர்.

இந்நிலையில் சந்திரிகா தலைமையில் ஐ சோ.மு மே தினத்தைநடத்தும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. கட்சியைப் பிரித்து வந்த ஒரு பிரிவின் தலைவிக்கு உடனடியாகத் தலைமைத்துவம் கொடுப்பதை நாம் விரும்பவில்லை.

அக்குழுவினர் சுதந்திரக் கட்சியினருடன் உறவுகொள்ள முனைகிறார்கள் போலத் தோன்றுகிறது. ஒஸி பிரிவினர் அரசுடன் சுமுகமாகச் செயற்பட விரும்புவது போல் தோன்றுகிறது இந்நிலையில் ஐ.சோ.மு எதிர்காலம் வேதனையாக உள்ளது. இதனை மாற்ற முழுமுயசிகளையும் மேற்கொள்வோம் என்றார்.

## தெல்லிப்பழை பிரிவில் சாரணர் பயிற்சி முகாம்

சாரணர் பயிற்சிப் பாசறை ஒன்று கடந்த 15, 16, 17ஆம் திகதிகளில் தெல்லிப்பழை உ. அ. அதிபர் பிரிவில் கொல்லங்கலட்டியில் மாவை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் காங்கேசன் துறை மாவட்ட ஆணையாளர் திரு. என். போஜன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கனிக்கூறு ஒன்றுக்கு 80 பேர்களும் கலைக்கூறு இரண்டுக்கு 12 பேர்களும் பங்குபற்றினர்- இப் பாசறையில் 90 வீத மாணவர்கள் ஜனசக்தி உதவி பெறும் குடும்பங்களிலிருந்து ஆசிரியர்களாகக் கடமையாற்ற தெரிவுசெய்யப்பட்டோராவர்.

இப்பாசறையில் சாரணர் சங்கம் உருவான விதம், உலக சாரணர் சரித்திரம், இலங்கை சாரணர் சரித்திரம், பொது மக்கள் மத்தியில் சாரணர்களின் கடமைகள். ஆகிய விடயங்கள் பற்றி விரிவுரைகள் நடத்தப்பட்டதுடன் விரிவான அளவில் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. (52)

## ஆஸ்பத்திரியில் தண்ணீரில்லை

வேலணை கிராமிய ஆஸ்பத்திரி நோயாளர்களும் இங்கு கடமையாற்றும் ஊழியர்களும், வைத்திய அதிகாரியும் தண்ணீர் இன்றி கஷ்டமடைகின்றனர்.

இதற்குக் காரணம் இவ் வைத்தியசாலைக்கு சொந்தமான இரண்டு நீரிறைக்கும் மோட்டார்களும் வருடக்கணக்கில் பழுதடைந்துள்ளமையே யென தெரிவிக்கப்படுகிறது.

மேலும்இந்தஆஸ்பத்திரியில் நீர்வழங்கும்குழாய்களும் கடந்தகால சம்பவங்களினால் சேதமடைந்துள்ளன.

## கரன்ஸிக் கடத்தலில் விமானப் பணிப்பெண்?

ஏழுஇலட்சம் ரூபா இலங்கை கரன்சி நோட்டுக்களை கடத்த முனைந்த விமானப்பணிப்பெண் ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து இதுவரை கண்டு பிடிக்காதிருந்த மாபெரும்மோசடி என்று சுங்க அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டது.

இவ்வாறு கடத்திச் செல்லப்படும் நாட்டுக்கள் சிங்கப்பூர், மத்தியகிழக்கு நாடுகலில் வேலை பார்க்கும் இலங்கையர்களுக்கு அதிகவிலைக்கு விற்கப்படுகின்றன. கிடைக்கும் வெளிநாட்டு கரன்சி நோட்டுக்களைக் கொண்டு ஆடம்பரப் பொருட்களை வாங்கும், கடத்தல்க்காரர்கள் அவற்றை இலங்கைக்கு அனுப்புகின்றனர். என்று சுங்க வட்டாரங்கள்தெரிவிக்கின்றன

## ஜப். பிரதமர் வருகிறார்

ஜப்பானியப் பிரதம மந்திரி திரு. டொஸிகி கைபூ மே மாதம் 3 ஆம் திகதி ஒருநாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினை மேற் கொண்டு இலங்கை வருகின்றார்.

## புலிகள் - அரசு பேச்சு விபரம் சபைக்கு வரும்

-ரஞ்சன்

"புலிகளுடன் அரசு நடத்தும் பேச்சு வார்த்தைகள் பூர்த்தியானதும் சகல விபரங்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்."

இவ்வாறு பெருந்தோட்டத் தொழில், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரட்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி எம்.பி திரு. ஸி வி. குணரத்ன பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் புலிகள் – அரசு பேச்சுவார்த்தை தொடர்பாக எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளித்துப் பேசினார்.

திரு.குணரத்ன கேள்வி எழுப்பிப் பேசுகையில்: கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைச் சுட்டிக் காட்டியதுடன் தமிழ்ப் பயங்கரவாதக் குழு ஒன்று கொழும்புக்கு வந்துள்ளதா என சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளி வந்திருப்பதையும் விபரித்தார்.

## சுவையான செய்திகள்

### இரு கரச் சாதனை

இத்தாலியைச் சேர்ந்த பிரான் சிஸ் கோமரியா கிறபல்டோ (1464-1515) என்ற கவிஞன் ஒரே நேரத்தில் இரண்டு கவிதைகளை தன் இரு கைகளாலும் எழுதும் திறமை பெற்றிருந்தார்.

### ஆட்சியில்மட்டுமா மன்னன்?

மான்சிங் என்ற இந்திய அரசன் 1500 மனைவிமாரை மணந்து 4000 பிள்ளைகளுக்கு தந்தையானான் இவன் மகாராஜா பகவான் டாஸ் என்பவரின் தததுப்பிள்ளையாக இருந்து பின் அவரின் மகளை மணந்து கொண்டான்.

இரண்டாவது றெடோல் பே(F) என்ற மன்னரின் தாயை முதலில் மணந்தார். பின் மன்னரின் மகளை இறுதியில் மன்னரின் விதவை மனைவியை மணந்தார்.

### அபூர்வ நூலக இயக்குநர்

ஜோசெப் பேஜட் டெசன் என்ற நூலக இயக்குநர் முறாச்சைச் சேர்ந்தவர். இவர் கடிதங்களை சொல்லும் போது செயலாளர்கள் எழுதுவார்கள் இந்த வகையில் இவர் ஒரே நேரத்தில் 9 வெவ்வேறு தலைப்புகளில் 9வெவ்வேறு கடிதங்களை 9 வெவ்வேறு மொழிகளில் 9 வெவ்வேறு செயலாளர்கள் மூலம் எழுதுவிக்கும் திறமையுள்ளவர்.

## கொத்தணி முறை

பெருமளவு வீண் விரயங்களைத் தவிர்க்கவும், சிறந்த சேவையைப் பெறுமுகமாகவும் மட்டக்களப்பு விவசாய சேவை நிலையங்களின் உழவு இயந்திரங்களை சிறந்த முறையில் பயன்படுத்த கொத்தணி முறை அமைக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பில் இருக்கும் 17 விவசாய நிலையங்களிலும் உள்ள 37 இயந்திரங்களும் மூன்று கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டு, இவை மூன்று விவசாய சேவை நிலையங்களில் மட்டும் நிறுத்தி வைக்கப்படும்.

உழவு இயந்திரம் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள விவசாய சேவை நிலையத்திலே பணம் செலுத்தி தமக்குத் தேவையான நாட்களுக்கு ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### கனகன்புளியடி பஸ்சேவையில் பாதைமாற்றம் எதற்கு?

ஆசிரியர்
முரசொலி

794-ம் இலக்க யாழ் - கொடிகாமம் (கனகன் புளியடி வழியான) மார்க்கத்தில் முன்னர் இரு பஸ் வண்டிகள் முழுமையான சேவையிலீடுபடுத்தப்பட்டு வந்தனர். பின்னர் அச் சேவைகள் படிப் படியாகக்குறைக்கப்பட்டு தற்போது காலையில் கொடிகாமத்திலிருந்தும், மாலையில் யாழ்ப்பாணத்திலிருந்தும் இரு சேவைகள் மட்டும் இந்த மார்க்கத்தில் நடாத்தப்படுகிறன,

இந்த இரு சேவைகளும் அடிக்கடி நேரமாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றன. கடந்த புதன்கிழமைமுதல் கனகன் புளியடிசேவை கச்சேரி – மூத்திரைச்சந்தி - செம்மணியூடாக பாதைமாற்றம் செய்யப்பட்டு நடாத்தப்படுகின்றது இந்த பாதைமாற்றம் ஏன் செய்யப்பட்டதென்பது எவருக்கும் புரியவில்லை. அத்துடன் இதனால் பிரயாணிகளுக்கு வீண் கலாதாமதமும். இடைஞ்சலும் ஏற்படுகின்றது.

முத்திரைச்சந்தி பகுதிக்கு சேவை நடாத்தவிரும்பினால் கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி வழியாகவரும் 769-ம் இலக்க பஸ்களில் ஏதாவதொன்றை பாதைமாற்றம் செய்யலாம். அதைவிடுத்து கனகன் புளியடி, சரசாலை நுணுவில், மட்டுவில் மந்துவில் பகுதியைச் சேர்ந்தோருக்கெனஉள்ள ஒரு சில சேவைகளை இப்படி பாதைமாற்றம் செய்து, பிரயாணிகளுக்கு தொந்தரவு கொடுப்பதை யாழ் சாலை கைவிட வேண்டும - 794-ம் இலக்க கொடிகாமம் சேவை முன்னரைப்போல் வழமையான பாதைவழியே நடாத்த உடன் நடடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

சரசாலை — என். பாலகிருஷ்ணன், இ. கௌரி

### நறுமணம் இல்லாவிடினும் நாற்றமாவது இல்லாதிருக்குமா?

ஆசிரியர்
முரசொலி,

கடந்த 26-4-90-ல் தங்கள் முரசொலி பத்திரிக்கையில் வெளிவந்த வாசகர் கடிதப்பகுதியில் வீட்டுரிமையாளர்களே சற்று சிந்தியுங்கள் என்ற தலைப்பில் ஒரு வங்கி வாடிக்கையாளர் எழுதியிருந்த விடயம் சம்பந்தமாக முன் ஒருகாலத்தில் தென்னிலங்கைப்பகுதியில் பலகாலம் வாடிக்கையாளனாக இருந்தவனும் தற்போது யாழ்நகரவங்கியில் வாடிக்கையாளனாக உள்ளவனுமாகிய நான் எழுதுவது என்னவென்றால் நான் எத்தனையோ நாட்கள் அவ்வீதியால் வரும்பொழுது இந்த குப்பைக் காட்சியை கண்டு வேதனைப்பட்டுள்ளேன். தென்னிலங்கை வங்கிகள் முன்னால் உள்ள பகுதி ஒரு சாதாரண பூங்காவாக காட்சியளிக்கின்றது. அதற்குத்தான் இங்கு போதிய இடவசதியில்லை என்றாலும் சாதாரணமுறையில் என்றாலும் துப்புரவாக இருக்கமுடியதா? இதுவிடயத்தில் மக்களும், குறிப்பாக மக்களுக்காக இயங்கும் யாழ். மாநகரசபையும் ஏன் இந்நிலையைமாற்ற முன்வரக்கூடாது? மக்களுக்காக மாநகரசபை என்றால் இது விடயத்தில் உடன் நடவடிக்கை எடுத்து நிலையை மாற்றக் கூடாதா?

பண்டத்தரிப்பு — இ. தனகோபால்

## நாயன் மார்கட்டில் இன்று ஆண்டுவிழா

நாயன்மார்கட்டு பாரதிசன சமூக நிலையத்தின் 40 வதுவருடாந்த ஆண்டுவிழா இன்று நிலையத்தலைவர் திரு. வ. வேலாயுதம்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதமவிருந்தினராக யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு வி பி, பாலசிங்கம் அவர்களும் சிறப்புவிருந்தினர்களாக திரு க. சொக்கலிங்கன் (சொக்கன்) கொத்தணி அதிபர் கோண்டாவில். திரு க. மகேசன் பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிபர் ஆகியோரும்கலந்துசிறப்புரையாற்றவுள்ளனர்.

இரவுக்கலைநிகழ்ச்சியாகநிலையமாதர்சங்கத்தினரின் "வறட்டுக்கௌரவம்" என்னும் சமூக சீர்திருத்த நாடகமும் நிலைய கலைப்பிரிவினரின் தலைகொடுத்தான்தமிழன் என்னும் வரலாற்று நாடகமும் மற்றும் நகைச்சுவைகதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன, (33)

## வடம. கிழக்கில் அரிசிவிலை அதிகம்

வடமராட்சி கிழக்கில் புதிதாக உருவாக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால்விநியோகிக்கப்பட்டு வரும் அரிசியின் விலை தனியார் கடைகளில் விற்கப்பட்டு வரும் அரிசியின் விலையிலும் அதிகமாக உள்ளது.

தனியார் கடைகளில் அரிசியின் விலை ரூபா 12.50 ஆக இருக்கும் போது ப நோ கூட்டுறவுச்சங்கத்தில் அரிசியின் விலை 1கிலோ ரூபா 13 50 இற்கு விற்கப்படுவதாக மக்கள் புகார் தெரிவித்துள்ளார்கள் (43)

## வவுனியாவில் சிறுவர் இல்லம்

அன்பர் ஒருவரால் வழங்கப்பட்ட காணியில், சுமார் 5 இலட்சம் செலவில் வவுனியா-கத்தோலிக்க அநாதைச் சிறுவர்களுக்காக அநாதைச் சிறுவர் இல்லம் ஒன்று அமைக்கப்படவுள்ளது

50 சிறுவர்களைப் பராமரிக்கக் கூடிய இவ் இல்லத்தின் அடிக்கல் சம்பிரதாய பூர்வமாக நாட்டப்பட்டுள்ளது.

## உள்ளத் தூய்மைக்கு

# தியானம் போன்றே விளையாட்டும் உதவுகிறது

'மனிதனுடைய உள்ளம் தூய்மையாக அமைவதற்கு தியானம் அமைவதுபோல் விளையாட்டும் அமைகிறது.'

இவ்வாறு களவாஞ்சிக்குடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் 24-வது வருட நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் குறிப்பிட்டார்.

'தற்போது சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் விளையாட்டுத்துறைக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப் பட்டுள்ளன' என்றும் அவர் சொன்னார்.

## மண் அள்ளல் இங்கும் தடை

மாதகல் கடற்கரைப் பகுதியிலும் சம்புவில் துறை பகுதியிலும் மணல் அள்ளுவதற்கு விடுதலைப் புலிகள் தடை விதித்துள்ளார்கள்.

கடந்த காலங்களில் இக் கடற்கரை பகுதிகளில் பெருமளவு மணல் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதால் கடல் நீர் உட்புகுந்து விடும் நிலை இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

தும்பளப்பாய் வயல் காணிகளுக்குள் கடல் நீர் மாரி காலத்தில் உட்புகுவதால் விவசாயம் பாதிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது. (13)

5-ஆம் பக்கத் தொடர்ச்சி

### நள்ளிரவு......

லாக வேலை கொடுத்து கருணை காட்டுகின்றார்களாம்.

இதனைக் கொண்டு பார்க்கும் போது வேலைக்கு ஆட்களை ஒழுங்காக நியமிக்கும் அதிகாரி சைக்கிள் ஓட்டப் போட்டியை அங்கீகரிக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?

கடிகாரமுள்ளு நள்ளிரவு 12 மணி ஐந்து நிமிடம் எனக்கு காட்டுகின்றது. பஸ்ரியன் சந்தியில் சமயா சமய ஊழியர்கள் அனைவரும் ஓட்டப் போட்டிக்குத் தயராகி விட்டனர்.

போட்டியை ஆரம்பிக்க யாரும் இல்லை. இப்போட்டியில் இளம் இரத்தமும் ஓடுகிறது முதிர்ந்த இரத்தமும் ஓடுகிறது

சைககிள் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்ளும் ஒருவரே போட்டியை ஆரம்பிக்கிறார்... 'காமான்' சொல்ல யாருமில்லை தண்ணீர் ஊற்றுவாருமில்லை. நாம் மோட்டார் சைககிளில் அவர்கள் பின்னால் வருகிறோம். இப்போட்டியை அயல் வீடுகளில் உள்ளவர்கள் வேதனையோடு எட்டிப் பார்க்கின்றனர். சைகிகிள்கள் குருவி வேகத்தில் செலகின்றன.

சில சைக்கிள்கள் அபாய ஒலியை எழுப்புகின்றன. வேறுசில கடகடக்கின்றன. இடபடி பல வித ஓசைகளை ஓட்டப்போட்டியிற் கேட்க முடிந்தது.

கண்மூடித் திறப்பதற்குள் நள்ளிரவு நேர ஓட்டப்போட்டி நடந்து முடிந்துவிட்டது. போட்டியிலே இறுதியாக வந்தவர்... கண்ணீர் வடுகின்றார்... அவர் அருகில் சென்ற போது. நான் உழைத்தால் தான் எங்கள் குடும்பம் வாழ முடியும்.

கஷ்டப்பட்டு நித்திரை கொள்ளாமல் இஞ்ச வந்து சைக்கிள் ஓடி...பலன் ஏதும் இலல ..எத்தன நாளைக்கு பட்டினி... கிடக்கிறது... அந்த வாலிபனுடன் சோந்து அழ வேண்டும என்ற உணர்வு எமக்கு ஏற்படலாயிற்று.

எங்கட பெயர டேப்பரில போட்டிடாதையுங்கோ... தபாலக அதிகாரிகள் பழிவாங்கிப் போடுவினம் இருக்கிற வேலையும் இல்லாமப் போயிடும்... இப்ப அரைவயிருவது நிறையிது... அதில் மண்ணள்ளிப் போட்டிடாதையுங்கோ என்று ஒருவர் மிகவும் புணிவாக வேண்டினார்.

வீட்டில் நினைக்கினம் பிள்ள இரவு வேலைக்குப் போகுது... அரசாங்க உத்தியோகம் தானே... எண்டு நாங்கள் பிச்சக்காரரைவிடகேவலமாஇந்த மதிலோரம் நித்திர கொள்றத...கண்டா... என்று கூறும் போதே அவரின் கண்களும் கலங்கிவிட்டது.

இந்தசைக்கிள பாருங்கோ... பாறில ஒட்டு...கீழபாருங்கோ அதவும் ஒட்டு...றிம்மும் உக்கிப்போச்சுது... சைக்கிளும் கிறீஸ் இல்லாம சத்தம் போடுது... இந்த நிலையில் சைக்கிள வைச்சுக்கொண்டு... சைச்சிள் ஓட்டப்போட்டியில ஓடி எப்படி... முதலில வாறது... கொஞ்ச வேகமா ஓடினு... ஏதாவது உடையும் காசுக்கு எங்க போறது... விரக்தியோடு பத்தொன்பது வயது வாலிபன் பேசலானார்...

எனக்கு கலியாண எழுத்து நடந்திட்டுது. ...தபாற்கந்தோரில வேலை எண்டதால தான். இந்தகலியாணஎழுத்து நடந்தது ... இப்படி... என்னை இந்த நிலையில கண்டா... என்ன கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது...! என்றார் இருபத்தெட்டு வயது மதிக்கத் தக்க ஒருவர்.

தபாற்கந்தோரில என்ர மகன் வேலை எண்டு சொல்லுறதில அப்பா அம்மா பெருமையா நினைக்கினம்... சீதனத்தோட கலியாணம் பேசகினம்...நான் இந்த ரோட்டுக்கரையில் படுத்திருக்கிறதப் பாத்தா... எந்தத்தாயும தாங்கிக்கொள்வாளா? குரல்தளதளக்க விரக்தியின் விளிம்பில் நின்று பேசினான் .. ஒரு இளம் வாலிபன் வேலை தேடி அலைஞ்சு வயது தான் போகுது குடும்பம் பட்டினியில் வாடுது... க. பொ. த. உயதரப் பரீட்சையில் எனக்கு நல்ல மெறுபேறு இருக்கிது... வேலை இல்ல ...சைக்கிள் ஓட்டப்போட்டியிலகலந்துகொண்டாவது......வேலை கிடைக்குமோ...! அதுவும் இல்ல...

படிச்சுத்தான் என்ன பிரியோசனம்... ஒரு வேலை கிடைக்கிதில்லையே... வேலையில்லா கொடுமையில் ஒரு வடிவம் தான்...நாங்கள் எங்களப் போல... பரிதாப வாழ்க்கை... யாருக்கும் வரக் கூடாது...அதுவும் வறுமையில் வாடுற ஆக்களுக்கு வரக் கூடாது ... என படித்த வாலிபன்... அடக்கிவைத்திருந்த வேதனைகளை வெளியே கொட்டினான்.

வேலை இல்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினை என்பதை தபால்கந்தோர் சமயா சமய ஊழியர்கள் சோகக்கதை வெளிப்படுத்தி நிற்கிறது.

இவர்களின சோகத்தைப் போக்க தபாலக உயர் அதிகாரிகள் முயற்சிகள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இந்த சமயாசமய ஊழியர்களுக்கு இந்நிலை தொடர வேண்டுமா?

வேறு ஒரு ஒழுங்கு முறையில் இவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கக்கூடாதா?

தினசரி பனிக்குளிரில் வீதியில் படுத்து சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றுத் தான் வேலைவாய்ப்பு பெற வேண்டுமா?

சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா! ●

## காஷ்மீர் பற்றிய கருத்து பேதம்

# நியூயோர்க் சந்திப்பில் இணக்கம் ஏற்படவில்லை

இந்திய-பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர்களின் நியூயோர்க் பேச்சுவார்த்தை நெருக்கடியைக் குறைக்க உதவியுள்ள போதிலும் காஷ்மீர் சபபந்தமான கருத்து வேற்றுமைகளை அவர்களால் குறைக்க முடியவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால், பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் ஜகுல் யாகூப்கான் ஆகியோர் நியூயோர்க்கில் இரண்டரைமணி நேரம்பேச்சு நடத்தியபின் காஷ்மீர் சம்பந்தமான நெருக்கடியைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதில் இணக்கம் கண்டுள்ளனர்.

ஆயினும் காஷ்மீர் சம்பந்தமான கருத்து வேறுபாடுகளை அவர்களால் குறைக்க முடியவில்லை.

இருவரும் நடத்திய பேச்சுவார்தைகளின் பின் வெளியிடப்பட்ட அறிக்கையில்; தாம் மனம் விட்டுப் பேசியதாகவும் பரஸ்பரம உபயோகமான தகவல்களையும் பரிமாறிக் கொண்டதாகவும் நெருக்கடி குறைக்கப்பட வேண்டுமென்பதிலும் மோதல் தவிர்க்கப்பட வேண்டுமென்பதிலும் இணக்கம் கண்டிருப்பதாகவும் கூறியுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பாக உள்ள இரு நாட்டு டைரக்டர் ஜெனரல்களும் இடைவிடாது தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

இரு தரப்பும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தகவல் பரிமாற்றங்களுக்கு வழிவகைகள் திறந்திருக்க வேண்டும்.

இந்த மூன்று அம்சங்களில் உடன்பாடு காணப்பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்பதைப் பாகிஸ்தான் ஏற்கவில்லை என்றும் ஐ.நா. தீர்மானப்படி காஷ்மீர் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் யாகூர்கான் கூறியுள்ளார்.

காஷ்மீரில் அடக்குமுறை நிறுத்தப்பட வேண்டும் என்றும் சொன்னார் அவர்.

# அமெரிக்கா மீது அரபு நாடுகள் கடுஞ்சீற்றம்

அமெரிக்கப் பாராளுமன்றம் இஸ்ரவேலின் தலைநகர் ஜெருசலம் என்பதை ஆதரித்திருப்பது அரபு நாடுகளின் கோபத்தை சம்பாதித்திருப்பதுடன் பேரூட்டிலிருந்து அமெரிக்கப்பணயக் கைதுகள் விடுதலை செய்யப்படுவதையும் பாதித்துள்ளது.

மேற்கு நாட்டு ஆதரவு நாடுகளான எகிப்தும், ஜோர்தானும் மட்டுமன்றி பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் லிபியா ஆகிய நாடுகளும் அமெரிக்கப் பிரதி நிதிகள் சபையின் தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன.

இன்னும் 7 அமெரிக்கர்கள் லெபனானில் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## இன்று நாள் எப்படி?

மேடம்: உயர் பதவி, வாகன சுகம், கல்வியால் மகிழ்ச்சி, பிரயாண சுகம், தேடியவர் வருகை, வாக்குபலிதம்.

இடபம்: புதுமனைச் சிறப்பு, புண்ணிய வழிபாடு, வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் மூலம் இலாபம்.

மிதுனம்: தேடியவர் வருகை, வாக்கு பலிதம், இளைய சகோதரவழியுதவி, திடீர்ப் பிரயாணம்.

கடகம்: பிரயாண சுகம், விவாக நிச்சயம், உயர் பதவி, உத்தமர்களுறவு, வாகன இலாபம்.

சிங்கம்:கடற்தொழில்இயந்திர றொழில் செய்வோர் அகமகிழ்ச்சி, மாமன் வழியுதவி, தேடியவர் வருகை.

கன்னி: புதுமனைச் சிறப்பு, விருந்துபசாரம், வாக்கு பலிதம், கல்வியால் தொழில், பிரிந்தவர்கள் ஒன்று சேருதல்.

துலாம்: கல்வியால் தொழில், காதலர் மகிழ்ச்சி, தடைப் பட்ட பணவரவு, தூரத்துச் செய்தியால் நன்மை.

விருச்சிகம்: வாக்கு வசீகரம், எண்ணியது நடக்கும், வணிகர்கள் இலாபம், கலைஞர்கள் கௌரவிக்கப்படல்.

தனுசு. பணவரவு, வாகன மாற்றம்,சகோதரவழி கவலை, தூரத்து பிரயாணத்தடை, புதுத்தொழில்.


மகரம்: மனக்கவலை, பணமுடை, வாகன மாற்றம், வணிகர்கள் கடற்றொழில் இயந்திர தொழில் சமபலன்.

கும்பம்: தேடியவர்கள்வருகை, வாகன சுகம், இரு தொழில், மனையில் சுபகாரியம்.

மீனம்: விவாகநிச்சயம்,வாகன இலாபம்,உயர்பதவி, உத்தமர் களுறவு, சுக ஜீவியம், புத்திர வழி சுகம்;

★ யாழ் சோதிடர்
ச. அரியநாயகம்

# ஆற்றலாளர் அரங்கு



இருஷ்ணன் சிவராமன் கரவெடடியைச் சேர்ந்த 20 வயது மாணவன். பருத்தித்துறை ஹாடலி கல்லூரியில் கல்வி பயின்று, உயர் தரத்தில் 4 ஏ எடுத்த இவரைச் சந்தித்தபோது, உற்சாக நிலையில் தனது கருத்துக்களைத் தெரிவிக்கத் தொடங்கினார்;

என்னைப் பொறுத்தவரை நான் 4 ஏ எடுப்பேன் என்ற நம்பிக்கை எனக்குநிறைய இருந்தது. எதிர்பார்த்திருந்த பரீடசை முடிவு கிடைத்ததில் மகிழ்ச்சி தான்.

எனது தந்தை ஒரு விவசாயி. 5ஆம் வகுப்பு வரைதான் படித்துள்ளார குடும்பத்துல ஓரளவு பொருளாதாரக் கஷ்டம் இருந்தும், என்னையும் என சகோதரனையும் நன்றாகப் படிக்க வைததார். எப்பவும் என் பெற்றோர் எனக்குக் கல்வியில் ஊக்கமளித்தபடியே இருப்பார்கள், அதனால் என்னாலும் உற்சாகத்துடன் படிக்க முடிந்தது. என் சகோதரனும் கல்வியில் உதவி புரிவார் என் கல்லூரி ஆசிரியர்களும், டியூசன் ஆசிரியர்களும் என்னை நன்றாகப் படிக்கவேண்டுமென உற்சாகம் வழங்குவார்கள்; எனவே இவை யாவும் என் வெற்றிக்குப் பக்கபலமாக இருந்தன.

அடுத்து, என் எதிர்கால இலட்சியம் ஒரு சிறந்த டாக்டராக வரவேண்டும் என்பதுதான். அதுவே எனது குடும்பத்தாரின் ஆசையும் கூட.

மேலும், சம கால பிரச்சினைகளின்போது நான் பெரிதாகப் பாதிக்கப்படவில்லை காரணம் நான் அதிகம் அவற்றை கவனத்தில் எடுக்கவில்லை. அது பற்றி அதிகம் சிந்திக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த நேரத்தில் கல்வியில் முழுக் கவனத்தையும் செலுத்தியதால், எனது கல்வி எவ்விதத்திலும் பாதிக்கப்படவிலலை.

கல்வியைப் பொறுத்தவரை பாடசாலையிலும், டியூசனும் எனக்கு சம பலனையே தந்தன. என்னைப் பொறுத்தவரை எனது கல்லூரியின் கல்வித் தராதரம் திருப்தியாகவும், திறமையாகவுமுள்ளது: ஆசிரியர்கள் எல்லோரும் சிறந்த முறையில் பணியாற்றி, நல்ல கல்விப் போதனைகளை வழங்குகின்றனர்.

வெளிநாட்டிற்கு போவதில் எனக்கு அவ்வளவு நாட்டம் இல்லை. புலமைப் பரிசில் எதுவும் கிடைத்தால் மட்டும் போவேன். முக்கியமாக இங்கிருந்தே படித்து—சேவை புரிய விரும்புகின்றேன். வெளிநாடுகளுக்குப் போனாலும் கல்வியை முடித்துவிட்டுத் தாய் நாடு திரும்புவேன்,

நான் என்றும் மன விரக்தி அடைந்ததில்லை உற்சாகத்துடன்தான் படித்துவந்தேன். எந்த சோதனைகள், துன்பங்கள் ஏற்பட்டாலும் மனம் தளர மாட்டேன், நான் பரீட்சை நெருங்கும்போது மட்டும் படிப்பதில்லை. முன்னரே படித்து தயார் நிலையிலே இருப்பேன். அதனால் பரீட்சையின்போது பயமோ பதற்றமோ ஏற்படுவதில்லை.

கல்வியைத் தவிர வேறு எதிலும் எனக்கு ஈடுபாடில்லை எனக் கூறும் இந்த ஆற்றலாளர் கல்வியைத் தவறவிட்டவர்களும் மீண்டும் உற்சாகத்துடன் முயற்சி எடுக்கவேண்டும் என்றும், அதற்கு இறைவன் அருள் புரியவேண்டும் எனவும் வாழ்த்தி விடை பெற்றார். இவரும் சிறந்து வாழ முரசொலியுப் இவரை வாழ்த்துகின்றது.

# கிராமிய வீடமைப்பு கடன் உ. அ. அதிபர் பிரிவுகளில் விண்ணப்பம் பெறலாம்

15 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கிராமிய வீடமைப்புக் கடன் பெறுநர்களை பதிவு செய்யவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடன் பெறுநர் பட்டியலில் பதிவு செய்தவர்கள் மட்டுமே இக்கடனைப் பெறமுடியும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் மே மாதம் 7ம் திகதி தொடக்கம் 23ம் திகதி வரை பின்வரும் உதவியரசாங்க அதிபர்களினால் வழங்கப்படவுள்ளது.

நல்லூர், சாவகச்சேரி, மருதங்கேணி, பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை, ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு

இதற்காக விண்ணப்பிப்போர் தாம் வசிக்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டுமே விண்ணப்பங்களைப் பெறவேண்டும். விண்ணப்பங்கள் பெறும்போது தேசிய அடையாள அட்டையையும் குடும்பப்பதிவு அட்டையையும் கொண்டு செல்ல வேண்டும்.

மேற்படி பெறப்பட்ட விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வீடமைப்பு உத்தியோகஸ்தரிடம் மே மாதம் 30 ம் திகதிக்கு முன்னர் கையளிக்க வேண்டும். (03)

நாசகார செயல்களினால்

## அங்கத்தவர்களை இழந்திருக்கும் குடும்பங்களுக்கு மாதாந்த உதவி

கடந்த காலங்களில் இடம் பெற்ற நாசகார நடவடிக்கைகளின் போது குடும்பத் தலைவர்களை அல்லது பாதுகாவலர்களை இழந்த குடும்பங்களுக்கு விசேட மாத கொடுப்பனவு வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

ஒரு தனி நபருக்கு 300 ரூபாவும் ஐந்து பேருக்கு மேற்பட்டவர்கள் இருக்கும் குடும்பங்களுக்கு 500 ரூபாவும் மாதாந்தம் வழங்கப்படும். இக்கொடுப்பனவுகளுக்கான விண்ணப்பங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் கோரப்படும் என ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

## வவுனியா மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சி ஆரம்பம்

வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட் பயிற்சி ஆசியர்களுக்கான 9 நாள் முதற் கட்டப் பயிற்சி வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை, ஈரப்பெரியகுளம் பரகும் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

செட்டிகுளம் மற்றும் வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரிவு ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும், முஸ்லிம் ஆசியர்களுக்கும் ரமழான் நோன்புவை முடிவடைந்தபின் 30 ம் திகதி பயிற்சி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## யாழ் பஸ்நிலைய மேற்குப்பகுதி கடைகள் அகற்றப்படும்

யாழ் மத்தியபஸ் நிலைய புனரமைப்பு வேலையின் முதல்கட்டமாக பஸ்நிலையத்தின் மேற்குப் பகுதியில் உள்ள கடைகள் அகற்றப்படவுள்ளதாக தெரிவருகின்றது.

இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதே வேளை லொறி தரிப்பிடம் ஒன்று உருவாகுவதற்கா ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக்கருகே உள்ள ஒழுங்கை உள்ள நிலப்பரப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# ஈழவர் ஜனநாயக முன்னணியின் மே தின கோரிக்கைகள்

மே தினத்தை முன்னிட்டு ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) விடுத்த மே தினப் பிரகடனத்தில் இலங்கையின் நெருக்கடி தணிந்து சமாதானத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் இத்தருணத்தில் இலங்கை ஜனாதிபதியின் புதிய அணுகுமுறையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என தமிழ்பேசும் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் இனப்பிரச்சினையில் ஜனாதிபதி சமாதான முயற்சி வெற்றி பெறவேண்டும் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுடன் மலையக தொழிலாளருக்கு மாதச் சம்பளம், பிரஜா உரிமை, குடியிருப்புகளை சொந்தமாக்கல் ஆகிய வற்றிலும் தீர்வுகள் கிடைக்க வேண்டும் மலையகமக்களுக்கான புதிய நிர்வாக முறை ஆகியவற்றை ஈழவர் ஜனநாயக முன்னணி தனது மேதினபிரகடந்தில் தெரிவித்துள்ளது.

## பொதுக்கூட்டம் நடத்த தற்காலிகத் தடை நீக்கம்

பொதுக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்துவதற்கு அவசரச்சட்ட விதிகளின் கீழ் விதிக்கப்பட்ட தடை தற்காலிகமாக நீக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் 24 மணித்தியாலங்களுக்கு நாட்டில் பொதுக்கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்துவதற்கு மே தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

# இந்திய மீனவரை கடற்படைதாக்கியிருந்தால் கசப்பான சூழ்நிலை உருவாகியிருக்கும் - ரஞ்சன்

இந்திய மீனவர்மீது எமது கடற்படையினர் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தால் அது இரு நாடுகளுக்கும் இடையில் கசப்பான ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கும் இதேசமயம் இந்திய மீனவர்களை கைது செய்யும் அதிகாரத்தை விடுதலைப் புலிகளுக்கு நாம் வழங்கா விட்டாலும் அவர்கள் தமது மீனவர்களுக்கு நீண்ட காலமாக ஏற்படடு வரும் பாதிப்பை தடுப்பதற்காகவே அவ்வாறு செய்துள்ளனர். எனினும் நாம் அவர்களுடன் பேசி அவர்களை விடுவித்துள்ளோம் இவ்வாறு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

புலிகள் துப்பாக்கிகளை வைத்திருப்பதால் மட்டும் அரசாங்கம் அவர்களை பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை நாமே புலிகளையும் ஜே வி பியினரையும் பேச்சு வார்த்தைக்கு அழைத்தோம். வந்தவர்களுடன் பேசுகின்றோம் மறுத்தவர்களை வரமுடியாத இடத்திற்கே அனுப்பிவிட்டோம். அதோடு புலிகள் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அல்ல அவர்கள் இந்தநாட்டுப் பிரஜைகள் எமது நாட்டவருடன் எப்போதும் பேசலாம் அதற்கு நேரகால்ம் கிடையாது எனக் குறிப்பிட்டார்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அரசின் புதிய சலுகை

பண்டிகைக் காலங்களில், குறுகிய கால அடிப்படையில் தொழில் வாய்ப்பும் பெற்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் தொழிலாளர்களிடம் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கட்டணம் அறவிடாததோடு அவர்களுக்கு வரி விலக்கும் அளிக்கவுள்ளது.

இது தொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக சட்டத்தில் திருத்தம்ஒன்று கொண்டு வரப்படவுள்ளது.

## வாகரை நடமாடும் செயலகம் புனரமைப்பு வேலைக்கு முதலிடம்

(மட்டக்களப்பு)

வாகரையில் இன்று காலை எட்டு மணி முதல் நடமாடும் அரச செயலகம் நடைபெறவுள்ளது. வாகரை மாகவித்தியலயத்தில் நடைபெறும் இந்த நடமாடும் செயலகத்தில் அரச அதிபர் யோகநாதன் தலைமையில் அரச செயலக உயர் அதிகாரிகளும் கலந்து கொள்வர்.

கல்வித்திணைக்களம் நீர்ப்பாசன திணைக்களம் புனர்வாழ்வு புனரமைப்பு திணைக்களம் போன்ற அரச திணைக்களத தலைவர்களும் இதில் கலந்து சொள்வர்.

புனர் வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளில் மக்கள் குறைகளை நேரடியாகவே கேட்டு அறிந்து அவற்றுக்கு உடனடி பரிகாரம் காணவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்றைய நடமாடும் செயலகத்தில் வாகரை உதவி அரச அதிபர் பிரிவை சேர்ந்தவர்களுக்கு சுய தொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு கொடுப்பனவான நாலாயிரம் ரூபாவும் வழங்கப்படும். (05)

## உலகதமிழ்பண்பாட்டு பேச்சுகட்டுரைபோட்டி

உலகதமிழ் பண்பாட்டு இயக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ் மத்திய கலலூரியில் பேச்சுப்போட்டி கட்டுரைப் போட்டி ஆகியவற்றை நடாத்தவுள்ளது விண்ணப்பதாரிகளுக்கு எற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது போட்டிக்கு வருபவர்கள்பிரவேச அனுமதிப் பத்திரத்தையும் கொண்டுவரும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

## தவறு

நேற்றைய எமது செய்தித் தலைப்பில் முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி போராடும் என முன்னணி செயலதிபர் திரு யோகி குறிப்பிட்டிருந்ததாக பிரசுரிக்கப்பட்டிருந்தது.

தமிழ் மக்களினதும்முஸ்லிம் மக்களினதும் சுயநிர்ணய உரிமைக்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி போராடும் என்றே யோகி குறிப்பிட்டிருந்தார்.

## இந்தியா தோல்வி

ஒஸ்ரேலேஷிய கிண்ண சார்ஜ கிரிகெட் போட்டியில் இந்தியாவை பாகிஸ்தான் 26 ஓட்டங்களால் தோற்கடித்தது. பாகிஸ்தான் 9 விக்கெற்றுகளுக்கு235 ஓட்டங்களைப் பெற்றது, இந்தியா 46 ஓவரில் எலலா விக்கெற்றுகளையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது.

## இடம் மாறுகிறது

வவுனியா பொலிசாரின் விடுதி இடம்மாறுகின்றது தமது பொருள்களின் உடைமைகளையும் இடம்மாற்றும் பணியில் பொலிசார் ஈடுபடுகின்றனர்.

### அவசர...

அதற்குரிய கடிதத்தை காட்ட வேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பங்களை ஒப்படைத்தவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது (03)

### காலவதியான...

அப்பொருளினது விலை ஒட்டப்பட்டு விற்பனை செய்வதும் கண்டுபிக்கப்பட்டுள்ளது

கிராமப்புறங்களில் இந்த மோசடி நடவடிக்கை மூலம் அதிகளவு மக்களை ஏமாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

### 35 ஆயிரத்து..

ளும் குறித்த காலத்தில் தம்மை பதியாத காரணத்தினாலேயே இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை

மற்றைய நிவாரணக்கொடுப்பனவுகள் முடிவடைந்த பின்னர் இவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதாகபுனர்வாழ்வு அமைச்சு உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### ஒப்பந்தக்காரர்...

முடிவுறுமல் உள்ளன. கிளிநொச்சி விவசாயபீடக்கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றபோதும் இவ்வேலைகள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருகின்றன.

ஓமந்தையில் அமையவுள்ள ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கான கட்டடவேலைகள் ஒப்பந்தக்காரர்கள் இல்லாத நிலையினால் ஆரம்பிக்கப்படாமல் உள்ளதாக தெரியவருகின்றது.

இதேசமயம் பல பாடசாலைகள் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டு ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டும் மேசன் தொழிலாளர் பற்றாக்குறையால் வேலைகள் அரைகுறையில் உள்ளன (03)

### சிறையில்...

விஜேரட்ன தெரிவித்துள்ளார் ஜே வி,பியினர் இங்கு எல்லோருக்குமே ஆபத்தானவர்கள் எனவே இவர்களுக்கு ஆயுள் சிறையை வழங்குவதற்கான சட்டத்திருத்தங்களை கொண்டு வந்து பாராளுமன்றத்தில் அவற்றை நிறைவேற்றும் வரை அவசரகாலச்சட்டம் அமுலில் இருக்கும் எனவும் அமைச்சர் ரஞ்சன் குறிப்பிட்டார் என்றும் இந்தியவானொலி தெரிவித்தது

### வன்னியில்...

தில் இடம் பெறுமென தமிழீழ விடுதலை புலிகளின் கலை கலாசார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இவரது எழுச்சிப்பாடல் நிகழ்ச்சிகளை நடாத்த ஏற்பாட்டாளர்கள் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (11)


வாரமுரசொலி

மீண்டும் புதுப்பொலிவோடு ஞாயிறு தோறும் வெளிவருகிறது

விலை ரூபா 4 மட்டுமே


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 6ஆ இலக்கத்திலுள்ள அச்சகப்]பிரிவில் 28.04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது